உ



சிவாச்சாரியாரின்......

# அருள்ஜோதி

## சமய சஞ்சிகை


ஆசிரியர்

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் ஜே. பி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இந்துமத குருப்டாதிபதி

சிவாகம ஞானி

சிவாச்சார்ய சிம்மம்

## அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

அவர்களின் ஞாபகார்த்தமாக

சிவாச்சாரியாரின் ..........

# அருள் ஜோதி

எனும் ஆன்மீக இதழ் வெளி வருகிறது என்பதனை ஆன்மீகப் பெருமக்களுக்கு அறியத்தருகிறோம்.



சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி

## கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்

(அகில இலங்கை சமாதான நீதவான்)


## சர்வதேச இந்துமத குருபீடம்

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)

46, 7வது லேன், (புளூமெண்டோல் வீதி),

கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.

தொலைபேசி: 2393436, 0722-422239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவாச்சாரியாரின்

# அருள் ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் 08 புரட்டாதி, ஐப்பசி 2005 ஜோதி – 80

ஆசிரியர்: கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் - ஜே. பி.

## மலர்ந்த புஷ்பங்கள்


- ஆசிச்செய்தி
- ஆத்மபலன் அளிக்கும் ஆதவன்
- ஆறுமுகனின் ஆறுபடைவீடுகள்
- பார்வதி கல்யாணம்
- ஒரு ஹிந்து எவ்வாறு இருக்க வேண்டும்
- ஸ்ரீ துர்காதேவி
- ஸ்ரீ மஹாலக்ஷ்மி
- ஸ்ரீ சரஸ்வதி
- கிராமதேவதை
- மங்கையர் பகுதி
- ஞானாமிர்தம் வினா விடை



**சர்வதேச இந்துமத குருபீடம்**

**அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**

(அரச அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)

46, 7வது லேன், (புளூமெண்டோல் வீதி), கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.

தொலைபேசி, தொலை நகல்: 2393436,

செல்லிட பேசி: 0722-422239


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ கற்பக விநாயகர் துணை



"ஸர்வஸாதகமணி, ஸர்வ சாதக திலகம்"

## சிவஸ்ரீ தே. சு. முத்துக்குமாரசுவாமி சிவாச்சாரியார்

**(தென்னிந்திய அமைப்பாளர், சர்வதேச இந்துமத குருபீடம்)**

# அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி

*புண்ணியபூமியான லங்காபுரியில் ஜாதி, மத, இன வேறுபாடின்றி எல்லா இனங்களிலும் ஹ்ருயத்திலும் ஆண்டவன் இருக்கின்றான் என்கிற பெருநோக்குடன் இலங்கை இந்துமத குருபீடாதிபதி, சிவாகமஞானி, "சிவாச்சார்ய சிம்மம்" அருள்ஜோதி* **ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்** *அவர்களின் ஞாபகார்த்தமாக அருள்ஜோதி என்னும் ஆன்மிக இதழ் ஐயங்களைப் போக்கும் விதத்தில் சபரிமலை சாஸ்தாபீடாதிபதி கலாநிதி* **ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார்** *நடாத்திவரும் ஆன்மீக மலர் மூலம் விஷயங்களைப் படித்து நல்லுணர்வை பெறுமாறும் மேலும் இங்கு மட்டுமல்லாமல் சமய குரவர்கள் பாடியது போல் "தாய் நாடு முதல் வெளிநாடுகள் உட்பட:* **முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே** *என்கின்ற தேனினும் இனிய திருவாசகத்தின்படி "அருள்ஜோதி" பத்திரிகை எல்லோராலும் படித்து நன்மையை அடைய வேண்டுமென இறைவனை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.*

*ஸர்வஸாதகமணி*

**தே. சு. முத்துக்குமாரஸ்வாமி சிவாச்சாரியார்**

*14, கற்பகவிநாயகர் கோவில் தெரு,*

*கிழக்கு தாம்பரம்,*

*சென்னை - 59.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சர்வதேச இந்துமத குருபீடம் யாழ்/மாவட்டம் பிரதம அமைப்பாளர்

"பிரதிஷ்டா கிரியா ரத்தினம்"

**சிவபிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார்**

அவர்களின்

## ஆசிச் செய்தி



சர்வதேச இந்துமத குருபீடம் வெளியிட்டுவரும் சிவாச்சாரியாரின் அருள்ஜோதி எனும் ஆன்மீக மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மனநிறைவு கொள்கிறேன்.

மாதந்தோறும் சிறப்புக் கட்டுரைகள், சமய, ஆகம, வினாவிடைகள் போன்ற பல அம்சங்களோடு வெளிவரும் அருள்ஜோதி இலங்கைத்திருநாட்டில் மட்டுமல்லாமல் உலக நாடுகளில் வாழுகின்ற இந்து மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்று வருவது யாவரும் அறிந்ததே.

"அருள்ஜோதி" ஆசிரியரான சர்வதேச இந்துமத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் அவர்களின் பெரும் முயற்சியினால் வெளிவரும் இந்த ஆன்மீக மலர் ஆஸ்தீகப் பெருமக்களுக்கு அருளின்பம் ஊட்டும் ஞான மலராகத் திகழ எமது குருநாதர், இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி "சிவாகமஞானி" "அருள்ஜோதி" சிவப்பிரம்மஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் திருவடிகளைச் சிரம்தாழ்த்தி எமது நல்லாசிகளை வழங்குவதில் மனநிறைவு கொள்கிறேன்.

"சர்வே ஜனா - ஸுகினோ பவந்து"

- சுபமஸ்து -

**சிவபிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார்**
(யாழ்/மாவட்ட பிரதம அமைப்பாளர்)
சர்வதேச இந்துமத குருபீடம்
(சிவானந்த பவனம்).

முருக மூர்த்தி வீதி,
சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆத்மபலம் அளிக்கும் ஆதவன்

- A. M. ராஜகோபாலன் B.A. -

"உலகின் இருளைப் போக்கி, ஆத்மபலத்தை அளிக்கும் தேஜோ(ஒளி) மயமான சக்தி எதுவோ அதனை நமஸ்கரிப்போமாக" - **ரிக்வேதம்**

உலகம் அறியாமை என்ற இருளில் தடம் தெரியாமல் தவித்தபோது, நம் பாரதப் புண்ணிய பூமி, ஆன்மீக ஒளி காட்டி, வழிகாட்டி உதவியது. அத்தகைய ஒளியே வேதம் என்பது. அந்த வேதத்தின் அங்கமே ஜோதிடம். அந்த ஜோதிடம் என்ற இணையற்ற வானியல் கணிதத்தின் நாயகனே சூரியன்.

காஸ்யபர் என்ற மகரிஷியின் புத்திரனான சூரியனின் அளவற்ற வீர்யத்தைப் பற்றி மிகப் புராதனமான ஜோதிட நூல்கள் விளக்கி உள்ளன.

மனித வாழ்விற்கு மட்டும் இன்றி, செடி, கொடி, மிருகங்கள் ஆகிய அனைத்திற்கும் சூரிய ஒளியின் சக்தி அவசியமாகும். கற்பனை செய்து பார்க்கக்கூட முடியாத அளவிற்கு இத்தகைய சக்தியைத் தினமும் **'காயத்ரி'** மந்திரத்தின் மூலம் பெற்று அக்னி ஸ்வரூபமாகப் பிரகாசிக்கிறான் சூரியன்.

வான மண்டலத்தில் திகழும் ஆறு கிரகங்களான சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகியவற்றிற்கும் இரு சாயா (நிழல்) கிரகங்களான ராகு, கேதுவிற்கும் ஆகர்ஷண சக்தி சூரியனாலேயே ஏற்படுகிறது என்று மிகப் பிரசித்தி வாய்ந்ததும் மேலை நாட்டு வானியல் நிபுணர்களால் பாராட்டப்பெற்றதுமான **'சூரிய சித்தாந்தம்'** என்ற வடமொழி நூல் விளக்கி உள்ளது.

ஆதலால்தான், நவக்கிரகங்களில் சூரியன் தலைமை நாயகனாகக் கொண்டாடப்படுகிறான்.

**வேதங்களில் சூரியன்**

வேதங்களின் ஏழு சந்தங்களைக் குதிரைகளாகக் கொண்டு, ஸ்வர்ணமயமான தேரில், வானில் பவனி வருவதால் பகலவன், "சப்தாஸ்வன்" எனப் புகழப்படுகிறான். பறவைகளுக்கு அரசன் எனப் போற்றப்படும் கருடனின் மூத்த சகோதரனான **'மாதலி'** யைத் தனது ரதத்தின் சாரதியாகக் கொண்டவன் சூரியன்.

**ஆதவனும், அனுமனும்**

குழந்தையாக இருந்தபோது ஸ்ரீ ஆஞ்சநேயன் உதயசூரியனைக் கனியென நினைத்து, தனது அன்னையான ஸ்ரீ அஞ்சனாதேவியின் கைப்பிடியையும் மீறி வான மண்டலத்தில் தாவி, சூரியனைப் பிடித்தான். சூரியனின் ரதம் தடைப்பட்டு ஒரு நின்றுவிட்டதால் அனைத்து உலகங்களின் பருவகால நிலைகளும் நிலைகுலைந்து போயின. அதனால் வெகுண்ட இந்திரன், குழந்தை அனுமனின் முகத்தில் வஜ்ராயுதத்தினால் அடித்தான். ஆதலால் மூர்ச்சையாகிக் கீழே விழுந்த தன் குழந்தையைத் தந்தையான வாயு பகவான் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீற்றமடைந்த வாயு பகவானை இந்திரனும் சூரியனும் சமாதானப்படுத்தினர். மூர்ச்சை தெளிந்த குழந்தை அனுமனின் முகம் வஜ்ராயுதம் ஏற்படுத்திய தழும்பினால் சிறிது நீண்டுவிட்டது. அன்றிலிருந்து அக்குழந்தை 'ஹனுமன்' எனப் பெயர் பெற்றான் (ஹனு என்றால் முகம் நீண்டவன் என்று பொருள்.)

குழந்தையின் மீது கருணையும், வாத்ஸல்யமும் கொண்ட சூரியன், காயத்திரி மந்திரம் மற்றும் தேவ சூட்சும ரகசியங்களைக் குழந்தை ஹனுமானுக்கு உபதேசித்து அருளினான். அன்றைய தினத்திலிருந்து குழந்தை ஆஞ்சநேயன் சர்வ வியாகரண பண்டிதன்' ஆக விளங்கினான்.

**ஜோதிடத்தில் சூரியன்**

சூரிய மண்டலத்தில் சிம்ம ராசிக்கு அதிபதியாக விளங்கும் சூரியன், மேஷ ராசியைக் கடக்கும்போது அளவற்ற வீர்யம் பெற்று உச்சகதியில் சஞ்சரிக்கிறார். சுக்கிரனை அதிபதியாகக் கொண்ட துலா ராசியைக் கடக்கும்போது சூரியன் பலவீனமடைகிறார் (நீச்சம்)

ஜாதகத்தில் சூரியனுடைய நிலையை வைத்து ஜாதகரின் உடல் ஆரோக்கியம், ஆன்மீக பலம், தந்தையுடன் உறவு, ரத்தத்தின் தூய்மை, கண் பார்வை, பிறந்த குலம் ***(Family Background)*** ஆகியவற்றைத் துல்லியமாகக் கணித்துக் கண்டுகொள்ள முடியும்.

ஜாதகத்தில் ஜனன காலத்தில் தான் இருக்கும் ராசியிலிருந்து 7-ஆம் ராசியை முழு பலத்துடன் பார்ப்பவர் சூரியன். பெண்கள், பிள்ளைகள் ஆகியோருக்கு ஏற்ற வரனை நிர்ணயிக்கும் ஜனன கால நிலையை ஆராய்ந்து பார்த்தல் மிக மிக அவசியம். ஏனெனில், நன்னடத்தையுள்ள வாழ்விற்கு ஆன்மீக பலத்தை அளிப்பவர் சூரியன். பணம் இல்லாவிட்டால் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆத்ம பலம் இல்லா விட்டால் வாழ்க்கையே பாழாகிவிடுமல்லவா? ஆதலால்தான் ஜாதகத்தில் சூரியனின் நிலை அதிமுக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். குரு, சந்திரன், செவ்வாய் ஆகிய கிரகங்களை நட்புக் கிரகங்களாகக் கொண்ட சூரியன் ஜனனகாலத்தில் இந்தக் கிரகங்களுடன் சுபச் சேர்க்கை அல்லது சுபப் பார்வை ஏற்படும்போது அளவற்ற நற்பலன்களை அளிக்கிறார்.

**ஆயுர்வேதத்தில் (மருத்துவம்) ஆதவன்**

மனித உடலில் இதயம், ரத்த அழுத்தம், சிவப்பு அணுக்கள், சர்மத்தில் நிற அணுக்கள் ***(Pigmentation)***, கண் பார்வை ஆகியவற்றைப் பாதுகாத்து அருள் புரிகிறார் சூரியன். இவரது பலம் குறைந்திருப்பவர்களுக்கு இதய சம்பந்தமான நோய்கள், ரத்த அழுத்தம், ரத்த சோகை, சர்மத்தில் வெள்ளை நிறத் திட்டுகள் ***(Leucoderma)*** ஆகியவை ஏற்பட வாய்ப்புள்ளது. ஜாதகத்தில் லக்கினாதிபதி, புதன் (மருத்துவம், மூலிகைகளுக்கு அதிபதி) பலமாக இருந்தால் இந்நோய்களைத் தக்க சிகிச்சையினால் குணப்படுத்த முடியும். (ஆதாரம்-வராகமிஹிரர்)

சூரியனின் ராசி மண்டல மாறுதல், ஒவ்வொரு ராசியிலும் மாறுபடும் அவரது சக்தி விளைவுகள் ஆகியவை பற்றி வராகமிஹிரர், ஆர்யபட்டர், பாஸ்கராச்சாரியார், கல்யாணவர்மர் போன்ற ஜோதிட மகா புருஷர்கள் தங்கள் நூல்களில் விவரித்திருக்கிறார்கள். சூரியனின் நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்ட 'சூர்ய சித்தர்தம்' என்ற வானியல் கணிதமுறை உலகப் பிரசித்திபெற்றது.

**இதிகாசங்களில் சூரியன்**

சூரியனின் வம்சத்தில் உதித்த பல மாமன்னர்கள் தங்களது நீதி, நேர்மை, ஒழுக்கம், தர்மம் ஆகியவற்றில் சிறந்து விளங்கினர். அவர்களில் புகழ்பெற்றவர்கள் என்று ஹரிச்சந்திரன், நளன், மாந்தாதா, ஸ்ரீராமபிரான் ஆகியோரைக் கூறலாம். மகாபாரதத்திலும் சூரிய பகவானின் வர்ணனை உள்ளது.

'கொடுப்பதில் கர்ணன்' என்ற முதுமொழியின் நாயகனான கர்ணன் சூரியனின் புத்திரராவார்.

**பித்ருபூஜையில் சூரியன்**

புதல்வர்கள் தங்கள் தாய், தந்தையரையும் முன்னோர்களையும் உத்தேசித்துச் செய்யும் திதி, தர்ப்பணம், சிரார்த்தம் ஆகியவற்றின் பலன்களைப் பித்ருக்களிடம் சேர்ப்பித்து அதற்குப் பிரதியாக அவர்களது ஆசியை நமக்குப் பெற்றுத் தருவது சூரிய பகவான் எனப் புராதன நூல்கள் விளக்கியுள்ளன.

ஆயுள் முடிந்து இந்தச் சரீரத்தை விட்டபிறகு ஜீவன் சூரியனின் கிரணங்கள் வழியாக நல்லுலகைச் சென்றடைகிறது என 'கருடபுராணம்' விளக்கியுள்ளது.

**சூரிய தோஷத்திற்குப் பரிகாரம்**

ஜாதகத்தில் சூரியன் பலம் குறைந்திருந்தாலும் தோஷத்தை விளைவிக்கும்படி இருந்தாலும் அதற்குப் பரிகாரம் உண்டு. புராதனமான ஜோதிட நூல்களின்படி பரிகாரத்திற்குக் கட்டுப்படாத சூரிய தோஷம் எதுவும் கிடையாது.

மிகக் கடுமையாகப் போரிட்டும் ராவணனைத் தோற்கடிக்க முடியாமல் கலங்கிய ஸ்ரீ ராமபிரானுக்கு அகத்திய முனிவர் 'ஆதித்யஹிருதயம்' என்ற சூரிய துதியை உபதேசித்து அருளினார். அதனால் சூரிய பகவானின் திருவருளைப் பெற்று ஸ்ரீராமபிரான் அன்னை சீதையை மீட்டு, வெற்றிபெற்றதை ஸ்ரீமத் ராமாயணம் கூறுகிறது.

ஜாதகத்தில் இத்தகைய தோஷம் இருப்பவர்கள் தினமும் சூரியனை வணங்கி வருவதும் 'ஆதித்ய ஹிருதயம்' பாராயணம் செய்வதும் ஞாயிற்றுக்கிழமைகளில் திருக்கோயில்களில் தீபம் ஏற்றி வருவதும் மிகச் சிறந்த தோஷப் பரிகாரங்களாகும்.

**தந்தை-தனயன் உறவில் சூரியன்**

ஜாதகத்தில் சூரியனைப் பித்ருகாரகன் என வர்ணிக்கின்றன. பழமையான ஜோதிட நூல்கள். சில குடும்பங்களில் பல காரணங்களினால் தந்தைக்கும், பிள்ளைக்கும் கருத்து வேற்றுமையும் பகை உணர்ச்சியும் ஏற்படும். இதனைத் தந்தையின் புத்ர ஸ்தானத்திலிருந்தும் பிள்ளையின் ஜாதகத்தில் சூரியனின் நிலையையும் ஆராய்ந்து கண்டுபிடிக்க இயலும். இத்தகைய தோஷத்தின் தன்மை, கடினம் ஆகியவற்றைக் கணித்து அறிந்து அதற்குத் தக்க பரிகாரங்களைச் செய்வதன் மூலம் மீண்டும் குடும்பத்தில் ஒற்றுமையைப் பெற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய தோஷத்திற்கு அதிகச் செலவில்லாத, மிக எளிய பரிகாரங்கள் நமது புராதன நூல்களில் கூறப்பட்டுள்ளன.

அத்தகைய எளிய பரிகாரங்களைக் கூடச் செய்ய முடியாத பிள்ளைகள் தினமும் காலையில் நீராடி, சூரிய பகவானை வணங்கி வழிபடுவதன் மூலம் தோஷம் நீங்கிவிடும். இதனை அனுபவபூர்வமாகக் காணலாம்.

இதேபோன்று இதய நோய் உள்ளவர்களும் சூரிய பகவானை ஆராதித்து அளவற்ற நன்மைகளை அடையலாம்.

**மகாபுருஷர்களால் பூஜிக்கப்பட்ட கிரகம்**

வேத காலத்தில் சப்த ரிஷிகளும், பிற்காலத்தில் மகாபுருஷர்களும் மாமன்னர்களும் இந்த நவக்கிரக நாயகனைத் தினமும் தவறாது வழிபட்டு வந்துள்ளனர். சிலப்பதிகார காலத்தில் பூம்புகார் நகரில் இந்திர விழாவின்போது விசேஷச் சூரிய பூஜை நடந்ததாக வரலாற்று நூல்கள் இயம்புகின்றன.

மகா பக்தபுருஷரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதர் தனது 'சூர்யமூர்த்தே' என்ற வடமொழிக் கீர்த்தனையில் பரிதியைப் போற்றி பணிந்துள்ளார்.

உலகப் பிரசித்திபெற்ற 'கோனாரக்' (ஒரிசா மாநிலம்)கில் உள்ள அதி அற்புதமான சூரியனின் கோயிலில் மிகப்பெரிய அளவில் ஆண்டுதோறும் சூரிய பகவானுக்குப் பூஜைகள் நடந்துவந்துள்ளன எனச் சரித்திர நூல்கள் விவரித்துள்ளன. பல போர்களினால் தொடர்ந்து கலிங்கம் (தற்போதைய ஒரிசா மாநிலம்) பாதிக்கப்பட்டதால் இந்தச் சூரிய பூஜைகள் குறைந்து பிற்காலத்தில் நின்று போய்விட்டன.

**மகர சங்கராந்தியும் தமிழ்நாட்டில் பொங்கலும்**

தமிழ்நாட்டில் பிரசித்திபெற்ற பண்டிகையான பொங்கலின்போது புதுப்பானையில் பொங்கலிட்டு, கரும்பு, கனிகள் வைத்துக் கற்பூர ஆரத்தி எடுத்துச் சூரியனுக்கு விசேஷப் பூஜை செய்து வருவதை அனைவரும் அறிவர்.

வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் சூரியனின் பெருமை பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஈரான், இந்தோனேஷியா, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் சூரிய வழிபாடு இருந்துள்ளது என்பதற்குச் சரித்திரம் சான்று அளிக்கிறது.

காயத்திரி மந்திரத்தினால் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் சூரிய பகவானைத் தினமும் வணங்கி நல்ல ஆரோக்கியத்தையும் குல, குடும்ப நலன்களையும் பெறுவோம்.

**சூரிய துதி**

'சூர்யம் சுந்தர லோக நாதம்
அம்ருதம் வேதாந்த சாரம் சிவம்
சுரேஷம், அமலம் லோகைக சித்தஸ்வயம்
இந்திராதித்ய நரதீபம் சுரகுரும்
த்ரைலோக்ய சூடாமணிம்
ப்ரம்ம விஷ்ணு சிவ ஸ்வரூப
ஹ்ருதயம் வந்தே சதா பாஸ்கரம்'

இந்தச் சூரிய துதியைத் தினமும் குறைந்தபட்சம் 24 தடவைகள் கூறி சூரிய பகவானை வணங்கி வரவும் நோய்கள் நீங்கும். நன்மைகள் பெருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# "ஆறுமுகனின் ஆறுபடைவீடுகள்"

- தமிழருவி த. சிவகுமாரன் B.A. (Hons) -
(அமைப்பாளர், கரைநகர் கம்பன் கழகம்,
ஆசிரியர், வவுனியா தமிழ் தேசிய கல்லூரி)

அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்தலும் காத்தலும் அழைத்தலும் இறைவனது இடையறாத திருவிளையாடல்கள். இறைவனை உணர்ந்து அவனைச் சரணடைந்தால் அழிவில்லாத பேரின்பம் அடையலாம் என்பது சமயங்கள் காட்டும் பேருண்மை.

சந்திர மண்டலத்திற்குச் செல்லுமளவு விஞ்ஞானம் வளர்ந்தாலும் மனித ஆற்றலுக்கு ஒரு எல்லை உண்டு. மனிதனால் மரணத்தை வெல்ல முடியவில்லை. தனது இச்சைப்படி தன்னுடைய வாழ்க்கையையும் மாற்றியமைக்க இயலவில்லை. வாழ்நாளில் ஏற்படும் இன்பதுன்பங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் முன்கூட்டியே அறிந்து சீர் செய்யவும் நமக்கு ஆற்றலில்லை. இதனையே கவிக்குயில் பாரதியாரும்

"முன்னர் நம திச்சையினாற் பிறந்தோமில்லை;
முதலிறுதி இடை நமது வசத்தில் இல்லை;
மண்ணுமொரு தெய்வத்தின் சக்தியாலே
வையகத்தில் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்!

எனப் பாடியுள்ளார்.

ஆகவே மனித ஆற்றலுக்கு மேற்பட்ட சக்தியுண்டு. அதுவே அனைத்தையும் இயக்கிவருகிறது. அதனையே இறைவன் எனப் போற்றுகின்றோம். அத்தெய்வத்தை கோவிலில் கண்டு வழிபடுவதே சாலச் சிறந்தது என்பது எம்முன்னோர் நம்பிக்கை.

எமது நாட்டில் கோவில்களுக்குத் தனிச் சிறப்புண்டு. அது போன்றே தமிழகத்திலும் கோவில்களுக்குப் பஞ்சமில்லை. சிறிய ஊராக இருந்தாலும் அங்கும் கோயில் இருக்கும். சில இடங்களில் ஊர் சிறியதாக இருந்தாலும் கோயில் பெரியதாக இருக்கும். "ஊரானோர் தேவகுலம்" என்று உரையாசிரியர்கள் காட்டும் பழைய தொடர் மொழி ஒன்று உண்டு. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. இவை ஒவ்வொர் ஊரிலும் கோயில் இருக்க வேண்டியதன் அவசியத்தைச் சொல்கின்றன. திருமுருகாற்றுப்படையில் "ஒரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" என்ற அடி காணப்படுகின்றது. இதிலிருந்து ஓர்கள் தோறும் கோவில்கள் இருந்தமையும் அங்கே விழாக்கள் நிகழ்ந்தமையும் புலனாகின்றன.

தமிழ் நாட்டில் மிகப் பழங்காலம் தொட்டு முருக வழிபாடு மிகச் சிறந்த நிலையில் இருந்து வருகின்றது. மலையும் மலையைச் சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்துக்கு அவன் தலைவன் என்று மலை வாழ் மக்கள் அவனைத் தமக்கே உரிய தெய்வமாகப் போற்றி வழிபட்டு வந்தார்கள். பிற இடங்களிலும் முருகனுக்குரிய வழிபாடு இருந்து வந்தது. பொதுவாகத் தமிழ்நாடு முழுவதுமே முருகனுக்குரிய வழிபாடு எங்கும் பரந்து இருந்தது என்று திடமாகச் சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது கிடைக்கும் நூல்களுள் பழமையானவை சங்க காலத்து நூல்கள். அவற்றைப் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதிணெண் கீழ்க்கணக்கு என்று மூன்று வரிசைகளிலும் முதலில் நிற்பது பத்துப்பாட்டு என்னும் தொகுதி. அதில் பத்து நெடும் பாட்டுக்கள் உள்ளன. முதலில் நிற்பது திருமுருகாற்றுப்படை என்னும் நூல். அதனை இயற்றிய நக்கீரர் முருகப் பெருமானின் பெருமையை பல படியாக அந்நூலில் குறிப்பிடுகின்றார். எட்டுத் தொகையில் ஒன்றாகிய பரிபாடலில் திருப்பரங்குன்றத்தைப் பற்றிய பாடல்கள் சில உள்ளன. அவற்றிலும் முருகனுடைய புகழ் விரிவாகக் கூறப்படுகின்றது. எட்டுத் தொகையில் மற்றொரு நூலாகிய குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப்பாட்டு முருகனைப் பற்றியது. இவையன்றி மற்றைய பாடல்களிலும் முருகனைப் பற்றிய செய்திகள் வருகின்றன. இவற்றால் முருகன் முருகன் தமிழ்நாட்டிலுள்ள பலவகை மக்களும் வழிபடும் தெய்வமாக விளங்கினான் என்பதும் பல இடங்களில் அவனுக்குத் திருக்கோயில்கள் இருந்தன என்பதும் தெரிய வருகின்றன. அவனுடைய அவதாரம், அவனுடைய வீரச் செயல்கள், கருணை, அங்க அடையாளங்கள் முதலியவற்றையும் நன்கு அறியலாம்.

திருமுருகாற்றுப்படையில் முருகன் எழுந்தருளியிருக்கும் இடங்கள் இன்னவையென்று ஒரு புலவன் மற்றொரு புலவனுக்குச் சொல்லுவதாகப் பாட்டின் அமைப்பு இருக்கின்றது. அங்கே அவன் எழுந்தருளியிருக்கும் ஆறுபடை வீடுகளைப் பற்றிய செய்திகள் வருகின்றன. படைவீடு என்பது ஓர் அரசன் தன்னுடைய படைகளுடன் தங்கியிருக்கும் இடம் திருச்செந்தூரில் முருகப் பெருமான் படைகளுடன் சென்று தங்கியிருந்தான். அது அவனுடைய படைவீடு. வீரம் செறிந்த முருகன் எழுந்தருளியிருக்கும் மற்ற இடங்களையும் படைவீடு என்று சொல்லும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டுவிட்டது. திருமுருகாற்றுப்படையில் படைவீடு என்ற சொல் இல்லை. ஆனாலும் நக்கீரர் அந்த நூலில் சொல்கின்ற முறையை வைத்துத்தான் அறுபடைவீடுகள் என்ற வரையறையே உண்டாயிற்று. திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதோறாடல் பழமுதிர்சோலை என்னும் ஆறையும் நக்கீரர் குறிக்கிறார். குன்றுதோறாடல் என்பது எல்லா மலைகளையும் குறித்தது. "குன்று தோறாடலும் நின்றதன் பண்பே" என்று திருகாற்றுப்படையில் வருகிறது. அதற்குப் பொருள் யாதெனில் 'ஒவ்வொரு குன்றிலும் இருந்து திருவிளையாடல் புரிதலும் நிலையான முருகனுடைய இயல்பு' என்பதாகும். ஆகவே பல குன்றுகள் என்பது தான் படைவீட்டின் பெயராக இருக்க வேண்டும். ஆயினும் இப்போது குன்றுதோறாடல் என்பதே தலப்பெயராக வழங்கி வருகின்றது. முருகன் எழுந்தருளியிருக்கும் எல்லாக் குன்றங்களும் இந்தப் பெயருள் அடங்கும் எனவே முருகன் எழுந்தருளியிருக்கும் தலங்கள் இத்தனை என்று வரையறை செய்ய முடியாது. குறிப்பிட்ட தலங்களாகிய திருப்பரங்குன்றம் முதலிய ஐந்தும் பல மலைகளும் அவன் திருக்கோவில் கொண்ட இடங்கள்.

அருணகிரிநாதர் முதலிய அருளாளர்கள் திருமுருகாற்றுபடையை அடியொற்றியே முருகனுடைய படைவீடுகள் ஆறு என வகுத்துக்கொண்டு பாடியிருக்கிறார்கள். ஆறுமுகம் பெற்ற ஆண்டவனுக்குப் படைவீடுகளும் ஆறாக அமைவதில் ஓர் அழகு இருக்கத்தானே செய்கின்றது. குமரன் தோன்றிய இடமும் சிவபெருமானின் ஆறு திருமுகங்கள். எம்பெருமானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரமும் "சரவணபவ" "குமாராயநம" என்ற ஆறு எழுத்துக்களைக் கொண்டது. இதனை "ஆறு எழுத்து அடங்கிய அறுமறை" என்று நக்கீரரும் "இசைபயில் சடாக்ஷரம்" என்று அருணகிரிநாதரும் போற்றியுள்ளனர். இப்பெருமானது தாந்ரீக வழிபாட்டு யந்திரமும் ஆறு கோணங்களை உடைய ஆறு கோணேச்சரம் என்றே கூறுவர். இத்தெய்வத்துக்குரிய முக்கிய விரதமான கந்த சஷ்டியும் ஆறு நாட்கள் கொண்டாடப்படுகிறது. முருகன் சூரனோடு செய்த யுத்த நாட்களும் ஆறாகவே அமைந்துள்ளது.

இந்தவகையில் தமிழ்நாட்டிலுள்ள புனிதம் மிக்க ஸ்தலங்களாகிய அறுபடை வீடுகளை நினைத்தாலும் கண்டாலும் கேட்டாலும் எண்ணற்ற பயன்கள் விளையும் என்பர். அறுபடை வீடுகளில் வீற்றுள்ள ஆண்டவனை "திருப்பரங்குன்றத்து அரசே! சீரலைவாய் முத்தே! பழநி மலைக்கான மணிவிளக்கே! ஏரகத்தின் பெருவாழ்வே! குன்றுதோறாடல் குமரர்! பழமுதிர்ச்சோலை பரனே!" என்றெல்லாம் அகங்குளிர வாய்குளிர அழைத்து மகிழ்வார்கள் அன்பர்கள். இந்த அறுபடை வீடுகளில் அடியார்கள் பெற்று வரும் அநுபவங்கள் அநேகம். இத்தலங்களில் கந்த சஷ்டி காலத்தில் நடைபெறும் அற்புதங்கள், விநோதச் செயல்கள் எண்ணிறந்தவை.

"அடியவர்கள் நேசத்துறை வேலா
அறுமக விநோதப் பெருமாளே" என அருணகிரிநாதர் முருகனின் விநோதச் செயல்களைப் போற்றுவதையும் ஈண்டு நோக்கலாம். முருகனின் அறுபடை வீடுகளையும் நமதுடலிலுள்ள ஆறு ஆதாரஸ்தானங்களான மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணிப்ர்கம், அநாகதம், விசுத்தி ஆக்ஞை முதலியவைகளுக்கும் ஒப்பிடுவர். இத்தகைய அறுபடை வீடுகளில் வீற்றிருக்கும் அறுமுகனை நினைத்து வணங்கி உய்தி பெறுவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வதி கல்யாணம்

- தொ. சி. குப்புசாமி (சென்னை) -

கயிலை வந்தடைந்த பரமசிவனார், சப்தரிஷிகளை நினைத்தார். அவர்கள் பரமசிவனார் முன்பு தோன்றினார்கள். பரமசிவனார் தங்களை அழைத்ததற்காக மகிழ்ந்தார்கள். அவர் கருணையை வியந்தனர். உள்ளம் உவந்து "தேவதேவரே! எங்களுக்கு இடும் கட்டளை யாது?" என்று கேட்டார்கள்.

"சப்தரிஷிகளே! நீங்கள் இமயத்தரசனிடம் செல்லுங்கள். அவர் மகள் பார்வதியை எமக்கு மணமுடித்துத் தருவதற்கு பேசி முடித்துவிட்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டார். எழுவரும் இமயத்தரசனிடம் சென்றார்கள். அரசனும் அரசியும் சப்தரிஷிகளை வரவேற்று உபசரித்தனர்.

"பரமசிவனார், பார்வதியை மணந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார். திருமணம் பேசிமுடிக்க எம்மை உம்மிடம் அனுப்பியுள்ளார்" என்பதை சப்தரிஷிகள், பர்வதராசனிடம் கூறினார்கள். "கயிலை வாசனுக்கு எங்களது மகள் பார்வதியை திருமணம் செய்து தருவது எமது பாக்கியம்" என்று மலையரசன் கூறினான்.

கயிலை நாதன் முன்பு தட்சன் மகள் தாட்சாயினியை மணந்து கொண்டார். ஆனால் தட்சனை பரமசிவன் தண்டித்தார். தலையைத் துண்டித்தார். அதை எண்ணியே அஞ்சுகின்றேன் என்று மலையரசன் மனைவி மேனை கூறினாள்.

"தட்சன் வேள்வி செய்யும்போது ஈசனை நிந்தித்து அவருக்கு அளிக்க வேண்டிய அவிர்ப்பாகத்தைத் தராததால் ஈசனார் தட்சனை தண்டித்தார். தம்மை வந்தனை செய்வோருக்கு அறக் கருணையையும், நிந்தனை செய்வோர்க்கு மறக்கருணையையும் காட்டவல்லவர் மகாதேவன்" என்று சப்தரிஷிகள் கூறினார்கள். இதைக் கேட்டதும் மேனை, தன் தவறான கூற்றுக்குத் தன்னை மன்னிக்கும்படி ரிஷிகளிடம் வேண்டிக் கொண்டாள். பார்வதி தேவியை மணந்துகொள்ளும் பொருட்டுப் பரமசிவனார் இங்கு எழுந்தருள வேண்டும் என்று மலையரசனின் சம்மதத்தையும், விண்ணப்பத்தையும் தெரிவித்தனர். ஈசனிடம் விடைபெற்று ரிஷிகள் தங்கள் இடத்திற்குத் திரும்பினார்கள்.

திருமணத்தைச் சீரும் சிறப்புமாக நடத்துவதற்காக, மலையத்துவசன், எழில் மிக்க மண்டபத்தையும் கண்கொள்ளாக் கவினுறு அலங்காரங்களையும் தேவதக்கனைக் கொண்டு செய்து முடித்தான். தேவர்களுக்கெல்லாம் அழைப்பை விடுத்தான்.

தன் மனைவி மேனையுடன் கயிலைக்குச் சென்றான். ஈசனைக் கண்டு வணங்கினார்கள். இன்றே திருமணத்தை நடத்தி விடலாம் என்றும் இமயத்திற்கு எழுந்தருளுமாறும் ஈசனிடம் விண்ணப்பம் செய்தனர். அவ்வாறே எழுந்தருள்வதாகக் கூறி ஈசன் அவர்களை அனுப்பி வைக்கார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாடை உடுத்தி, நவமணி ஆபரணங்களை அணிந்து, மணிமகுடத்தையும் சூட்டிக்கொண்டு பொன்னார்மேனியன், விடை மீதமர்ந்து நந்திதேவர் முன்னே செல்ல, மாலும் அயனும் உடன்வர, தேவர்குழாம் பின்னே தொடர திருமண மண்டபத்தை அடைந்தார். இமயத்தரசனும் அரசியும், பருண கும்பத்துடன், மங்கலஇசை முழங்க மணமகன் மகாதேவனை வரவேற்றனர். அரியும் அயனும் அருகிருக்க அரன் மணக்கோலத்தில் அமர்ந்தார்.

பார்வதி, பரமசிவன் திருக்கல்யாணத்தைக் கண்டுகளிக்க, தேவாதி தேவர்கள் உருத்திரகணநாதர்கள், முனிவர்கள், இலக்குமி, சரஸ்வதி, இந்திராணி, தேவமாதர்கள், அஷ்டதிக்பாலகர்கள் கடல்போல் திரண்டு வந்திருந்தனர். எல்லோரும் இமயத்தில் குழுமிவிட்டதால், வடவரை இமயம் தாழ்ந்து தென்னாடு உயர்ந்துவிட்டது. இமயப்பகுதியில் குழுமியிருந்தோர் நெருக்கடி மிகுதியாஇமயம் நடுக்கம் கண்டது.

ஈசனார் அகத்திய முனிவரை தம்முன் அழைத்தார். உடனடியாக அவரைப் பொதிகை மலைக்குச் செல்லுமாறு கட்டளையிட்டார். வடவரையையும், தென்புலத்தையும் சரிசமம் செய்யும் பொருட்டு அகத்தியரைப் பொதிகை மலைக்கு அனுப்பினார்.

அகத்தியர் தென்னாடு செல்லத் தயங்கினார். பரமசிவன், பார்வதி திருமணத்தைக் கண்டுகளிக்கும் பாக்கியம் தமக்குக் கிடைக்கவில்லையேயென்று வருந்தினார். திருமணத்தைக் கண்டு களிக்க அனுமதிக்குமாறு பரமனை வேண்டினார். ஈசனோ "நிலத்தை சரிசமன் செய்யம் திறன் வேறு யாருக்குமில்லை; நீரே செல்ல வேண்டுமென கட்டளையிட்டார். பொதிகை மலைக்கு செல்லுங்கள். எமது திருமணக் கோலத்தை அங்கு உமக்குக் காட்டுவோம்" என்று பரமசிவனார் கூறினார். அகத்தியர் தென்பொதிகைக்குச் சென்றதும் இமயம் சரியான நிலைக்கு வந்துற்றது. அகத்தியன் பள்ளியில் திருமணக் கோலத்தைக் கண்டுகளித்தார்.

பரமனும் பார்வதியை அழைத்திட, தேவமாதர்கள் புடைசூழ பார்வதிதேவி, பரமனை வணங்கி பக்கத்தில் அமர்ந்தார். அரம்பையர்கள் ஆட, கந்தர்வர்கள் பாட, மங்கல வாத்தியங்கள் முழங்க, வேதியர்கள் வேதம் ஓதிட, பிரம்மா யாகத்தீயை வளர்க்க குருவும் சுக்கிரனும் திருமணச் சடங்குகளை நடத்தினர். மலையரசன், மகாதேவன் மலரடிக்கு சந்தனம் பூசி, பூசைசெய்து, இறைவன் கரத்தில் பார்வதியின் கரத்தைப் பிடித்துத் தந்தார். "எம்மகளை உமக்களித்தேன்" என்று தாரைவார்த்து மலையரசன் தந்தார்.

வந்திருந்தோர் அனைவரும், திருமணக் காட்சியைக் கண்டு களித்தப் பரமனையும் பார்வதியையும் வாழ்த்தி வணங்கி விடைபெற்றனர். இரதிதேவி தனக்கு அருள்புரியுமாறு வேண்டினாள். மன்மதன் உயிர்பெற்று எழுந்தான். பரமனைத் தொழுதான். தன்னை மன்னித்தருளுமாறு வேண்டினான். "தவறு உன்னுடையதல்ல" என்றார் பரமன், "மன்மதன் உருவம் இரதிக்கு மட்டும் தெரியும். மற்றையோருக்கு அவன் உருவிலி" என்று கூறி, "காமவேளாக ஆட்சியை நடத்திடுவாய்" என்று வரமளித்தார்.

மலையரசனிடமும் அங்குள்ளோரிடமும் விடைபெற்று, பரமசிவன் பார்வதியுடன் விடைமீதேறிக் கயிலை சென்றடைந்தார். உடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களுக்கு விடைதந்து அனுப்பினார். பரமனும் பார்வதியும் இணைந்ததால் எங்கும் துன்பம் நீங்கியது. மகேஸ்வரனும், உமாதேவியும், கயிலை திருக்கோயிலில் அமர்ந்தனர்.

## ஆறுமுகன் அவதாரம்

மாலும், அயனும், தேவராசனும் தேவர்களுடன் கூடி ஆலோசித்தனர். பரமசிவனும் பார்வதியும் மணந்து பல காலமாயினும், அவர்களுக்குக் குமரன் அவதரிக்கவில்லை. சூரபத்மனின் கொடுமைகளிலிருந்து விடிவு காணும் பொருட்டு, என்ன செய்வது என்று அறியாது கலங்கியிருந்தனர். கயிலைக்குச் செல்வோம், கயிலைநாதனிடம் நம் கவலையைக் கூறுவோம் என்று முடிவெடுத்தனர். அதன்படியே அவர்கள் எல்லோரும் கயிலைக்குச் சென்றனர். நந்தி தேவர் அரனாரின் அனுமதிபெற்று எல்லோரையும் சிவ சந்நிதிக்குள் அனுப்பிவைத்தார்.

மாலும், உடன் வந்த பிரமாதி தேவர்களும், பரமசிவனைப் பணிந்தேத்தி சூரபத்மன் கொடுமைகளிலிருந்து தங்களைக் காத்தருள்புரியும்படி வேண்டினார்கள். பரமனும் அவர்களிடம் "வருந்த வேண்டாம், புதல்வனைத் தருகின்றோம்" என்று கூறினார்.

பரமசிவன் தனது ஆறுமுகங்களின், ஆறுநெற்றிக் கண்களிலிருந்து ஆறு பொறிகளைத் தோற்றுவித்தார். அப்பொறிகளின் வெம்மையால் பூமி பிளந்தது. நீர்நிலைகள் வற்றின. உயிர்களெல்லாம் நடுங்கின. வெம்மை அழிக்கும் தன்மையல்ல. எனினும் தாங்கும் தன்மையல்ல. அங்கிருந்த தேவாதிதேவர்கள் வெம்மை தாங்க முடியாமல் ஓடினார்கள். பக்கத்தில் அமர்ந்திருந்த பார்வதி தேவியும் வெம்மை தாங்கமாட்டாமல் சந்நிதிக்குள் ஓடினாள். ஓடும்போது கால்சிலம்பிலிருந்து நவரத்தினப் பரல்கள் சிதறின. தேவாதிதேவர்கள் எல்லோரும் மீண்டும் வந்து முறையிட்டனர். விண்ணையும், மண்ணையும் தகிக்கும் வெப்பத்தைத் தணிவிக்குமாறு வேண்டினார்கள்.

அத்தீபொறிகளைச் சிவபெருமான் தன்னிடமே திரும்ப அழைத்துக் கொண்டார். ஒரு முக நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு பொறிகளை விடுத்தார். வாயுதேவனையும் அக்னி தேவனையும், ஆறு பொறிகளையும் தாங்கிக்கொண்டு சென்று சரவணப் பொய்கையில் விடுமாறு பணித்தார். அவ்வெப்பத்தைத் தாங்கும் சக்தியை அவ்விருவருக்கும் அரனார் அளித்தார்.

ஆறு பொறிகளும் குமரனாக வளர்ந்த பின்பு, சூரர்களை அழிப்போம் என்று அரனார் கூறித் தேவர்களை அனுப்பி வைத்தார்.

வாயு தேவனும் அக்னி தேவனும் ஆறு பொறிகளையும் மாறி மாறிச் சுமந்து கங்கையில் விட்டனர். கங்கை ஆறு பொறிகளையும், சரவணப் பொய்கையில் சேர்ப்பித்தது. தேவர்கள் எல்லோரும் சரவணப் பொய்கைக்கு சென்றனர். சோதியே சுடராகி, சுடரே ஆறுமுகங்களுடன் கூடிய திருமுருகப் பெருமானாகி, குழந்தை வடிவில் சரவணப் பொய்கையில் செந்தாமரை மலர்களில் வீற்றிருக்கக் கண்டனர்.

உலகம் உய்விக்கப் பிறந்த குழந்தையை வளர்க்கும் பொறுப்பை மாலும் அயனும், கார்த்திகைப் பெண்களுக்குத் தந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகப் பெருமான், ஆறு குழந்தைகளாகி, ஆறு கார்த்திகைப் பெண்களுடன் சேர்ந்தார். கார்த்திகைப் பெண்கள் பாலூட்டிச் சீராட்டி வளர்த்தனர். ஒப்பில்லா சக்தியைப் பெற்ற சிவனாரின் சிசுவே குமரன் என்று தேவாதி தேவர்கள் வணங்கினார்கள். கார்த்திகைப் பெண்கள், குமரனைப் போற்றி வளர்த்தனர். குழந்தைகளின் விளையாட்டைக் கண்டு களித்தனர்.

## நவ வீரர்கள் தோற்றம்

சிவபெருமான் நெற்றிக் கண்களில் தோன்றிய தீப்பொறியின் வெம்மையைத் தாளமுடியாமல் உமாதேவியார் சந்நிதிக்குள் ஓடினார். வெப்பம் குறைந்ததும் ஈசன் அருகில் வந்து அம்பிகை அமர்ந்தாள்.

உமாதேவியார் வெம்மைதாங்காது ஓடியபோது, அவர் பாதச் சிலம்பின் நவமணிகள் சிதறின. ஈசன் அருளால் நவமணிகளில் அம்பிகையின் திரு உருவம் தோன்றின. அவ்வுருவங்கள் ஈசனருகில் சென்று வணங்கின. அவர்கள் ஈசனை விரும்பினார்கள். ஈசனின் அருள் நோக்கால் அந்த நவ வல்லிகளும் கர்ப்பமுற்றனர். இச்செயலைக் கண்ட பார்வதிதேவி அவர்கள் கர்ப்பம் முடிவுறுதல் கூடாது என்று சபித்தார்.

அந்த சாபத்தைக் கேட்டதும் நவசக்திகள் நடுக்கத்தால் வியர்த்தனர். வியர்வைத் துளிகள் இலட்சம் வீரர்களாகத் துளிர்த்தெழுந்தனர். வாளேந்திய வீரர்களாய் சிவனாரின் முன்பு வணங்கி நின்றார்கள். "அசுரர்களை அழிக்க முருகன் தோன்றியுள்ளான். அவனுக்குப் படைகளாய் இருங்கள்" என்று வாழ்த்தி ஈசனார் வரமளித்தார். இலட்சம் வீரர்கள் கயிலை சிவ சந்நிதியில் சிவதொண்டு செய்து வந்தார்கள்.

நவசக்திகள் பார்வதி தேவியாரை வழிபட்டு வந்தனர். அவர்கள் கருவில் குழந்தைகள் காளையர்களாய் வளர்ந்து வந்தனர். கர்ப்பச் சுமையை தாங்க முடியாத நவசக்திகள் பரமனையும் பார்வதியையும் துதித்துப் புதல்வர்களைப் பெற்றிட அருள்புரியுமாறு வேண்டினார்கள். சாபவிமோசனத்தை அம்பிகையிடம் கோரினார்கள். அம்பிகையின் அருளால் நவவீரர்கள் தோன்றினார்கள். வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேஸ்வரர், வீரபுரந்தரர், வீரராக்கதர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீதீரர் என்று நாமம் பெற்ற நவ வீரர்கள், நந்தி கணத்தைச் சேர்ந்தவர்கள்.

அளவிலா அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள் என்று ஈசனார் அம்பிகையிடம் கூறினார். சிவபெருமான் நவவீரர்களுக்கு வாட்களை அளித்தார். முருகவேளுக்குத் துணையாய், படைத்தலைவர்களாய் இருங்கள் என்று ஆசியருளினார். இலட்சத்து ஒன்பது வீரர்கள் தயாராகிவிட்டனர்.

சூரபத்மனுக்கு வரமளித்த ஈசன், தன் சக்தியாலன்றிப் பிற சக்தியால் அவனை அழிக்க முடியாது என்று அருளினார். முருகன், நவவீரர்கள், இலட்சம் கயிலை வீரர்கள் யாவரும் ஈசனாரின் சக்தி வெளிப்பாட்டில் தோன்றிவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான வரங்கள் பெற்ற சூரபத்மன் தனக்கு மிக்கார் யாருமில்லையென்று செருக்குற்று தேவர்களுக்குப் பல கொடுமைகளை இழைத்தான். அவனை அழிக்க சிவசக்தியை ஆறுமுகப் பெருமானாகவும், இலட்சத்து ஒன்பது வீரர்களையும் சிவனார் தோற்றுவித்துள்ளார்.

## கந்த பெருமான்

தம் நெற்றிக் கண்ணில் தோன்றிய தீப்பொறிகள், சரவணப்பொய்கையில் குழந்தையாகி, வளர்ந்து வரும் தம் மகனைக் காணும் பொருட்டு பரமன் அம்பிகையுடன் உலா வரும் குமரனைக் கண்டு அம்மையும் அப்பனும் அக மகிழ்ந்தார்கள்.

சிவனார் சொல்லியவண்ணம், ஆறு குமாரர்களை தன்னிருமுகமும், ஈராறு கரங்களும் கொண்ட ஓர் உருவாகி குமரக் கடவுள் நின்றார். கந்தன் எனும் பெயர் பெற்றார். அம்பிகை தமக்குச் சுரந்த ஞானப் பாலை ஆறுமுகனுக்கு ஊட்டினார். ஆறுமுகனை ஈசன் கரத்தில் பார்வதி தந்தார். அம்மைக்கும் அப்பனுக்குமிடையில் கந்தன் வீற்றிருக்க இடப வாகனத்தில் அமர்ந்த காட்சியைக் கண்ணுற்ற பிரமாதி தேவர்கள், மூவரையும் துதித்தனர். தேவர்களை உய்விக்க வேண்டும் என்று வேண்டித் தொழுதார்கள்.

குமரனைப் போற்றி வளர்த்த கார்த்திகைப் பெண்கள், அம்மையப்பனை வணங்கினார்கள். கார்த்திகைப் பெண்களால் குமரன் வளர்க்கப்பட்டதால், முருகன் கார்த்திகேயன் எனவும் அழைக்கப்படுவான். கார்த்திகை நட்சத்திரத்தன்று முருகனை வழிபடுபவர்கள் எல்லா நலன்களும் பெற்று வாழ்வார்கள் என்று பரமன் அருளினார்.

பராசர முனிவரால் சபிக்கப்பட்ட அவரது குமாரர்கள் அறுவர் சரவணப் பொய்கையில் மீன்களாய் இருந்தனர். பார்வதிதேவியின், ஞானப்பால் பெருகி சரவணப் பொய்கையில் கலந்திட்டதை, ஆறு மீன்களும் பருகியதால், சாபம் அவர்களுக்கு அறுந்தது. ஈசனை முனிகுமாரர்கள் வணங்கினார்கள். ஈசனார் அவர்களை திருப்பரங்குன்றத்துக்கு சென்று தவமியற்றச் சொன்னார். குமரன் பரங்குன்றத்துக்கு வருவான், உங்களுக்கு அருள் புரிவான் என்று வாழ்த்தியருளினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஹிந்து எவ்வாறு இருக்க வேண்டும்?

- நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு -

விஜயன் எய்த அம்பினால் அடிபட்டு தேர்க்காலில் குற்றுயிரும், குலையுயிருமாய் கிடக்கும் போது அந்தணர் உருவெடுத்து வந்த அந்த பரந்தாமனுக்கு அவன் கேட்ட தர்மத்தை தாரைவார்த்துக் கொடுத்தானே தர்மதேவதையின் தவப்புதல்வன் கர்ணன், அவனைப்போல் சாவின் விளிம்பிலும் தர்மத்தை நழுவவிடாத தன்மையுடன் இருக்க வேண்டும்.

ஏனெனில் பக்தியும் பண்பாடும் சேர்ந்ததுதான் இந்துமதம். இந்துமதமானது, சிந்து சமவெளி புதையுண்டு வெளிக்கொர்ந்த மொஹஞ்சோதாரா ஹரப்பா நாகரிக காலத்திற்கு முன்பே தோன்றியது.

நமது பாரததேசத்தில் உள்ள ஆன்மீக செல்வத்துக்கு ஈடு இணை கிடையாது. இது ஞானபூமி, மனிதனின் அடுத்த பரிணாமத்திற்கு வித்திட்டு வரும் ஞானபூமி.

## கல்லும் மெய்யாகும்

ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு உருவம் உண்டு. உருவம் இல்லாத பொருளே உலகில் கிடையாது. கல், மண், மரம் என்ற அசைவற்ற பொருளாயினும் சரி, நிறமான பொருளும் உண்டு. நிறமற்ற பொருளும் உண்டு. சுவையான பண்டமும் உண்டு. சுவையற்றவையும் உண்டு. பதம் என்று உண்டென்றால் எதிர்பதம் என்று ஒன்று உண்டு.

பிறப்பதற்கு முன்பே தம் குழந்தை இவ்வாறு இருக்க வேண்டுமென பெற்றோர்கள் கற்பனை செய்வதில்லையா? தாய் தந்தையரை இழந்த சின்னஞ்சிறு குழந்தைகள் தன் தாய் தந்தையர்கள் இவ்வாறுதான் இருப்பார்கள் என தன் மனதிற்குள் ஒரு கற்பனை வடிவத்தை பதிய வைத்து அதனுள் ஒரு நிம்மதியை தேடி தமது வாழ்நாளை கழிக்க வில்லையா?

அதுபோல தம்மைப் படைத்தவன் இப்படித்தான் இருக்க வேண்மென ஒரு அழகான உருவத்தை தன்மனதினுள் பதிய வைத்தும், அதனை சிலையாக வடித்தும் அதனை ஒரு சுத்தமான, சிறப்பான இடத்தில் வைத்து வணங்குவதில் தவறேதும் இல்லையே. உருவம் உள்ளவன் இறைவனே என கூறமுடியாது, ஏனெனில் அவன் பிறப்பு இறப்பற்றவன், பற்றற்றவன், இயற்கையோடு ஒன்றியவன்.

அதுபோல இறைவன் உருவம் இல்லாதவன். ஆனால் அவன் நமக்கு அருள் பாலிக்கும்போது அவனை உணர்கிறோம்.

ஒரு சிறு குழந்தை கடவுள் எப்படியிருப்பார் என்று கேட்கிறது. அப்பொழுது அது மனதில் நிற்கும்படியாக கடவுள் இப்படித்தான் இருப்பார் என அழகிய கண்ணன் உருவத்தையோ, முருகன் உருவத்தையோ அல்லது வேறு தெய்வங்களின் உருவத்தையோ நாம் காண்பிக்கும் போது அக்குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அழகிய உருவத்தை மனதில் பதிய வைத்துக் கொள்கிறது. அவர் எங்கிருக்கிறார் என வினவும்போது கோயிலைச் சுட்டிக் காட்டுகிறோம். இப்படிப்பட்ட கேள்விகள் எழும்போது, அவர்களுக்கு மனதில் பதியும் படியாக அழகிய உருவத்தையும் அழகிய சூழல் நிறைந்த இடத்தையும் நாம் காண்பித்தோயாக வேண்டும்.

ஒரு மனிதன் பிறக்கும்போது குழந்தை வடிவில் இருக்கிறான். அப்போது அவனுக்கு தாய் அவன் அரைப்பகுதியில் ஒரு சிறிய துணியை அணிவிக்கிறாள்.

அவன் பள்ளிக்குப் போகும் பருவத்தில் அரை நிஜாரும், மேல்சட்டையும் அணிவிக்கிறாள்.

அவன் இளமைப்பருவத்தில் பேன்ட், சட்டை அணிந்து கொள்கிறான்.

வயோதிக காலத்தை அமையும்போது வேட்டியும், சட்டையும் அணிந்து கொள்கிறான்.

அதுபோல தமது கால சூழ்நிலைக்குத் தகுந்தவாறு எப்படி ஆடையின் வடிவங்களை மாற்றி அதற்கேற்றபடி தன்செயல்பாட்டிலும் மாற்றம் ஏற்படுத்திக் கொள்வது போல

இறைவன் காத்தல் காலத்தில் விஷ்ணுவாகவும், படைக்கின்ற காலத்தில் பிரம்மனாகவும், அழித்தல் காலத்தில் சிவனாகவும் காட்சியளிக்கின்றார். அவனை நம்பியவர்கள் எந்த உருவத்தை மனதில் நிறுத்தி வணங்குகிறார்களோ அந்த உருவத்தில் அவன் காட்சியளிக்கின்றான்.

மும்மூர்த்திகளும் வெவ்வேறு தொழில்களை செய்தாலும் வெவ்வேறாக செயல்படுவதாக நமது சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

உருவ வழிபாடு என்பது எல்லா மதத்தினரிடையும் உள்ளது. முஸ்லீம் அன்பர்கள் மெக்காவிற்கு சென்று 'காபர்' என்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட புனித உருவத்தை முன்னால் நிறுத்தி வணங்குகிறார்கள்.

ரோமன் கத்தோலிக்க அன்பர்கள் மாதாவை சிலையாக வடித்து வணங்குகிறார்கள். மேலும் புத்தமதம், ஜைனமதம் என்று எல்லா மதத்திலும் உருவ வழிபாடு இருந்து வருகிறது.

எதுவாயிருந்தாலும் மனிதன் பார்க்கிற கண்ணோட்டத்தைப் பொறுத்துதான் கல்லா, கடவுளா என்பது.

அபிராமிபட்டர் பார்க்கும் பெண்களையெல்லாம் பராசக்தியாக நினைத்து வழிபட்டார்.

ஸ்ரீ ராம பெருமான் மணலைப் பிடித்து வைத்து சிவனாக பூஜித்தார்.

பரதன் ஸ்ரீ ராமரின் பாதரட்சையை பூஜித்து வந்தார். இவர்களெல்லாம் புராணங்களில் இடம்பெற்று மஹா அவதார புருஷர்கள் ஆகவில்லையா?

இந்து மதத்தில் கூட உருவ வழிபாட்டைப் பற்றி குறிப்பிடப்பட்டதாக தெரியவில்லை. ஏனெனில் இங்கு வற்புறுத்தலோ, நிர்ப்பந்தமோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணித்தலோ எதுவும் எப்பொழுதும் இருந்ததில்லை. எதுபோலென்றால் பூக்கள் என்னிடம் நிரம்ப மது உள்ளது அருந்த வாருங்கள் என்று வண்டுகளை அழைப்பது கிடையாது.

சுத்தமான, கலப்படமற்ற பொருளென்றால் வாங்குவோர் கூட்டம் என்றென்றும் குறையாது.

கீதையிலே கூட உனக்கு எது நல்லதெனப் படுகிறதோ அதையே செய் என்கிறது. கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கும் இதையேதான் கூறுகிறார்.

கிருஷ்ணபகவான் கடவுளைக் கும்பிடு என்று கூறுகிறாரே தவிர என்னைக் கும்பிடு என்று கூறவில்லை. ஏனெனில் தனியொருவரின் ஆதிக்கம் என்பது இங்கு கிடையாது. மேலும் இந்து மதத்தில் எத்தனை கடவுள்கள் என்கிறார்கள்.

ஒரு தனி மனிதனுக்கே அவன் வாழ்க்கையில் பாசத்திற்கு தாய் என்ற ஒரு உறவும், வழிகாட்ட தந்தை என்ற உறவும், பணிவிடைக்கும், ஆசைக்கும் மனைவி என்ற உறவும், பிற்காலத்தில் தன்னை தாங்கி நிற்க சந்ததிகள் என்று மகன்கள் உறவும், அந்திமக்கலத்தில் தாம் கொஞ்சி விளையாட பொம்மைகள்போல் பேரக் குழந்தைகள் என்று பற்பல உறவுகள் தேவைப்படுகிறதே. ஏன் எல்லோரும் மனிதர்கள் தானே? அதற்கு ஏன் இத்தனை உறவுப் பெயர்கள்? ஒவ்வொரு உறவுகளையும் எவ்விதத்தில் நடத்த வேண்டுமோ அல்லது யார்யாரால் எதைச் செய்ய முடியுமோ அதற்காகத்தான் இத்தனை உறவுப் பெயர்கள்.

அதுபோல இறைவன் ஒருவனே. ஆனால் அந்த இறைவன் ஒவ்வொரு கால கட்டத்திலும் அவன் வெவ்வேறு உருவமாய், வெவ்வேறு செயல்களைச் செய்ய வேண்டியிருப்பதால், பல்வேறு பெயர்களால் அழைக்கப்படவேண்டி உள்ளது.

ஒரே செடியில் பிறந்த எல்லா பூக்களும் வெவ்வேறு காரியங்களுக்கு பயன்படும் போது அதனுடைய மதிப்புகள் கூடும் குறையும். அது போய்ச்சேருகின்ற இடத்தைப் பொறுத்து அதன் பெயர்களும் மாறும். மதிப்பும் கூடும் குறையும்.

## ஏன்? எதற்கு?

சுயநலமற்ற இறைவனை மனிதன் ஏன் தொழ வேண்டும்.? எதற்காகத் தொழ வேண்டும் என நோக்குகையில்,

மனிதன் காலமெல்லாம் பிரச்சனைகளில் உழல்பவன், அவனும் காலச் சுழற்சியில் மேலும் கீழும் புரட்டப்படுவன். அது திருமாலின் கையில் சுழன்று கொண்டிருக்கும் சக்ராயுதத்தின் சுழற்சியால் நிகழக்கூடியது.

பிரச்சனைகள் என்பது அணைக்கட்டில் முட்டி மோதும் பேரலை கொண்ட வெள்ளத்தைப் போன்றது. அவ்வெள்ளத்தை மதகுகளின் உதவியால் திறந்து விடாப்படின் வெள்ளம் மென்மேலும் முட்டி மோதி அணைக்கட்டே உடைந்து ஊரையே அழித்துவிடுவது போல, அவ்வாறுதிறந்து விடப்பட்ட வெள்ளமானது ஊருக்குள் புகுந்து அழிவை ஏற்படுத்தாமலிருக்க வேண்டுமாயின், வடிகால் வெட்டி அதன் வழி திசை திருப்ப வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோன்று மனிதன் பிரச்சனைகளால் அலைக்கழிக்கப்படும் போது, அவனது மனச்சுமைகளை, மனக்குமுறல்களை மனக்குறைகளை ஏதாவது ஓரிடத்தில் இறக்கி வைத்து சற்றே இளைப்பாற ஒரு சுமைதாங்கி தேவைப்படுகிறது.

அவன்தான் மாதவன், கருணாகரன், மதுசூதனன். ஆம் அவனிடம் உனது குறைகளைக் கொட்டிவிட்டால் உனது மனச்சுமைகள் இறங்கிவிடும்.

சாதாரண மனிதனிடத்தில் உனது குறைகளைக் கூறுகையில் அவன் உன்னை எள்ளி நகையாடுவான். அல்லது நீ பெருந்தவறு செய்தவனென்றால், பிறரிடத்தில் உன்னைக் காட்டிக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை கூட அவனுக்கு அமைந்து விடும்.

கோயிலில் கற்சிலைபோல் உறைந்திருக்கும் இறைவன் உயர்வானவன். எல்லா வற்றையும் தாங்கிக் கொள்ளும் உலகத்தின் காலச் சுமைதாங்கி.

இதற்காகத்தான் நமது ஆன்றோர்கள் உருவ வழிபாட்டை ஏற்படுத்தினார்கள். மேலும் கோயில் என்பது எல்லோரையும் ஓரிடத்தில் கூடச்செய்யும் இடம்.

இங்கு வருவோர்கள் சில சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே வரவேண்டுமென்று வகுக்கப்பட்டுள்ளது.

கோயிலுக்கு குளித்துவிட்டுத்தான் வரவேண்டுமென்று என்பது முதல் நியதி. நூற்றுக் கணக்கானவர்கள் கூடுகின்ற கோயிலில் உடல் அசுத்தமாக வரும்போது உடலில் ஏற்படும் துர்நாற்றமும், அதன் மூலம் ஏற்படும் நுண்கிருமிகளும் அங்கு வருவோரையும் பாதிக்கும் எனக்கருதியே, இப்படியொரு நியதி வகுக்கப்பட்டதுடன், காலணி அணிந்து கோயிலுக்குள் வரக்கூடாது. பல இடங்களை மிதித்து வரும் காலணியில் ஒட்டிக்கொண்டு தேவையற்ற அசுத்தங்கள் மூலம் மற்ற பக்தர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதும், மேலும் பெண்களின் வீட்டு விலக்கு நாட்களின்போது கண்டிப்பாக கோயிலுக்குள் நுழையமாட்டார்கள். ஏனெனில் அத்தகைய கால கட்டத்தில் அதன்மூலம் ஏராளமான கிருமிகள் வெளிப்படுகின்ற காலமாகையால் அவ்வமயம் மற்றவர்களுக்கும் அக்கிருமிகளால் ஏதாவது உபாதைகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற மனப்பான்மையே காரணமாகும்.

மேலும் ஆண்டவனுக்கு அளிக்கப்படும் நைவேத்தியங்கள் இறைவனுக்கு படைத்துவிட்டு அதனை கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்படும். இது எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற உயர்ந்த சமதர்ம சோசலிஷமென்பது நமது கோயில்களில் பல்லாயிர ஆண்டுளுக்கு முன்பே தோன்றிவிட்டது.

மேலும் கோயிலுக்குள் நுழையும் முன்பாக கால்களை தூயநீரில் அலம்பிய பிறகே நுழைய வேண்டும் என்பது, கால்களின் மூலம் பரவும் நோய்க்கிருமிகள் மற்றவர்களுக்கும் பரவாமல் இருப்பதைத் தடுக்கவும், கோயிலில் ஒளிரும் ஜோதி கண்ணுக்கு விருந்தாகவும் அங்கு இசைக்கப்படும் நாதஸ்வர ஓசை செவிக்கு விருந்தாகவும் அங்கு வழங்கப்படும் பிரசாதங்கள் வயிற்றிற்கு விருந்தாகவும் கோயில்களில் ஆண்டவனுக்காக போடப்படும் மலர் மாலைகளின் மணங்களும், மணங்கள் கிருமிநாசினிப் பொருள்களாகவும் உடம்பிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திற்கும் புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் ஊட்டுகிறது.

மேலும் அக்கோயிலைச் சார்ந்த பல குடும்பங்கள் இறைத்தொண்டு செய்து அதனூடே தனது வாழ்க்கையையும் நடத்தி வருகின்றனர்.

மேலும் கோவிலைச் சுற்றிலும் அடர்ந்த மரங்களுடன் கூடிய நந்தவனம் அமைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் இறைவனுக்குத் தேவைப்படும் மலர்களைப் பறித்துக் கொள்ளுவதுடன் சுற்றுப்புறச் சூழல்களைப் பாதுகாக்க அக்காலத்திலேயே இந்துமதக் கோயில்கள் பயன்பட்டு வருகின்றன.

மேலும் கோவில்களில் நடக்கும் திருவிழாக்களின் மூலம் அக்கம் பக்கத்திலுள்ள மக்கள் ஒரே இடத்தில் கூடும்போது தமது வேற்றுமை பகையுணர்வை மறந்து சகோதர ஒற்றுமையுடன் பழகிவருவதுடன் பல இசைக்கலைஞர்களுக்கு வாய்ப்பளித்து இசைத்தொண்டு புரிவதுடன் மக்களுக்கு இசை அமுது விருந்தளிக்கின்றனர்.

மேலும் திருவிழா காலங்களில் பக்தர்கள் வசதிக்காக தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டு மக்கள் பசி, மற்றும் தாகசாந்தி செய்வதால் தான தருமங்கள் மேலோங்குகிறது. திருவிழாக் காலங்களில் அமைக்கப்படும் கடை கண்ணிகள் அமைக்கப்படுவதால் ஏழை வியாபாரிகள் தொழில் செய்து பயனடைகிறார்கள்.

தேரோட்டக் காலங்களில் தேர் வடம்பிடித்து இழுக்கையில் மக்களின் ஒற்றுமை உணர்வு வெளிப்படுவதுடன் அது நம் நாட்டின் ஒற்றமை உணர்வின் ஒப்பற்ற தத்துவமாகும். ஒத்துபிடித்தால் தேர் ஊர் வந்து சேரும் என்று கிராமப்புறங்களில் பழமொழியே கூறுவார்கள். அது ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதன் மறுபதிப்பாகும்.

மேலும் தேரோட்டக் காலங்களில் தேர்வடம் பிடித்து இழுப்பவர்களுக்கு பானங்களும், அன்னதானமும் செய்து புண்ணியம் தேடிக் கொள்வதுடன் பக்தர்கள் பசியாற்றிக் கொள்ளுகிறார்கள். திருவிழாக்களின் மூலம் தான தருமங்களும், ஒற்றுமை உணர்வும் பக்தி உணர்வுகளும், வெளிப்படுவதற்கென்றே இப்படிப்பட்ட திருவிழாக்களை நமது முன்னோர்கள் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

நமது கோயில்களின் வாயிலில் வானோங்கி வானளாவி நிற்கும் கோபுரங்களை எழுப்பியே கோயில்களை எழுப்பினர். அக்கோபுரங்கள் பலவகையான அரும்பெரும் அதிசயிக்கத்தக்க தெய்வீகச் சொருபங்களுடன் திகழுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அப்பிராண்டமான கோபுரங்கள் மாபெரும் இறையார்ந்த தத்துவத்தையும் மனித வாழ்க்கையையும் உலகிற்கு பறை சாற்றுவதாகவும் அமைந்துள்ளது.

கோபுரங்களை சிற்பங்கள் தாங்கி நிற்கிறதா? சிங்பங்கள் கோபுரங்களைத் தாங்கி நிற்கிறதா? இது எதனை விளக்குகிறதென்றால், ஆன்மீகத்தை மதம் தாங்கி நிற்கிறதா? அல்லது மதம் ஆன்மீகத்தை தாங்கி நிற்கிறதா என்ற கேள்விக்கு இதுவரை விடை கிடைத்த பாடில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சங்களை இறைவன் தாங்கி நிற்கிறாரா? அல்லது இறைவனை பிரபஞ்சங்கள் தாங்கி நிற்கிறதா? என்ற ஆராய்ச்சிக்கு இதுவரை யாராலும் முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை.

## கீதை காட்டும் பாதை!

கீதை என்பது உலகில் உருவாக்கப்பட்ட, நூல்களிலேயே ஒப்பற்ற ஒரு சாசனம் எனலாம்.

இது மதத்திற்காக உருவாக்கப்பட்டதல்ல மனிதனுக்காக உருவாகியது. கண்ணபரமாத்மாவால் குருக்ஷேத்ரம் எனும் போர்க்களத்தில் படையினரின் ஆரவாரங்களும், ஆயுதங்கள் மோதும் பேரொலியின் மத்தியிலும் சங்க நாதத்தின் பேரொலியிலும், அருளப்பட்டது.

கீதையை உற்றுநோக்கின் போரில் ஈடுபடும்போது மட்டுமே கட்டளைகளை கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்குப் பிறப்பிப்பார். மற்றவை யாவும் உபதேசமாகத்தான் காணப்படும். இந்த இடத்தில் சகலமும் ஆட்டிப்படைக்கும் 'சனார்த்தனன்' என்ற அகந்தைக்கு சற்றும் இடமில்லை.

அர்ஜுனனிடத்தில் கிருஷ்ண பரமாத்மா கூறும்போது கூட உனக்கு சரியெனப் பட்டதை செய் என்றுதான் கூறுகிறாரேயொழிய இதை நீ செய்தே தீர வேண்டுமென வற்புறுத்தவில்லை.

மேலும் கீதோபதேசம் செய்கின்ற ஓவியங்களை, திரைப்படங்களிலும், சிற்பங்களையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். பொதுவாக ஒரு பேச்சாளர் பேசும்போது கூட உயரமான மேடையில் நின்று பேசுவார்கள், ஒரு தலைவர் பேசும்போதும் அவ்வாறே, ஒரு ஆசிரியர் மாணாக்கனுக்கு கற்பிக்கின்றபோது கூட ஆசிரியர் உயர்ந்த மேடையில் நிற்க, மாணவன் கீழே அமர்ந்து பாடம் பயிலுவதையும் பார்த்திருக்கின்றோம்.

ஆனால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்கின்ற வேளையில் ஒரு தேரோட்டியாக கீழே அமர்ந்திருக்க உபதேசம் பெறுகின்ற மாணவனான அர்ஜுனன் மேலே அமர்ந்திருப்பார். இந்த இடத்தில் அவர் ஒரு பகவானாகவோ, அல்லது ஒரு ஆசிரியராகவோ செயல்படுவதைப் பார்க்கையில் அவருடைய கடமை உணர்ச்சியே மேலோங்கி நிற்பதை நாம் காண்கின்றோம்.

மேலும் பரமாத்மா அர்ஜுனனிடமிருந்து எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்த்து அவருக்கு தேரோட்டியாக இருக்கவில்லை.

இதனையே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா 'கடமையைச் செய் பிரதிபலனை எதிர்பாராதே' என்கிறார். மேலும் கீதையிலே கடமையுணர்விற்கு முக்கியத்துவம் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

எவன் ஒருவன் தனது கடமையை சரிவர செய்கிறானோ அவன்தான் உலகின் தலைசிறந்த தர்மவான் என பொருள்படக் கூறுகிறது.

நாம் அன்றாடம் உண்கிற உணவைக்கூட எப்படி சாப்பிட வேண்டுமென கீதையில் குறிப்பிடப்பட்டிருக்கும். கண்டகண்ட உணவுகளை கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் சாப்பிடாமல் அதிலும் முறையாக சாப்பிடக் கற்றுக் கொள்ள வேண்டும். சாப்பிடும்போது நல்ல சிந்தனையோடு சாப்பிட வேண்டும். அந்த உணவிற்கு மதிப்பளித்து தலைவணங்கி சாப்பிட வேண்டும்.

உனக்கு விதிக்கப்பட்டுள்ள கடமையை பிரதிபலனை எதிர்பாராமல் செய்கின்ற வேளையில் இறைவனைக் காணலாம் என்கிறது கீதை.

உன் கடமையை நீ சரிவரச் செய்தால்தான் சொர்க்கத்தின்" கதவுகளும் திறக்கும்.

உனது எல்லா பாவங்களையும், பாரங்களையும் என்மீது சுமத்திவிடு. உன்னை எல்லாவற்றிலிருந்தும் விடுபட வைக்கிறேன் என்கிறார் கிருஷ்ண பரமாத்மா.

நாம் எல்லோரும் இறைபக்தியைப் பற்றி ஓரளவேனும் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் தூய்மையான எண்ணங்கள் அமைந்திட வேண்டும். நல்ல சிந்தனைகள் அமைய நல்ல அரும்பெரும் நூல்களை கற்றறிதல் அவசியம். அந்த நல்ல நூல் கீதையென அறுதியிட்டுக் கூறலாம்.

## நிரூபணமாகும் இந்து மதம்!

உலகில் வாதம் என்ற ஒன்றிருந்தால் எதிர்வாதம் என்ற ஒன்று இருக்கத்தான் செய்யும். ஆத்திகம் என்ற ஒன்று இருக்கும்போது நாத்திகம் என்ற ஒன்றும் இருக்கத்தான் செய்யும். இருக்க வேண்டும்.

ஒரு ஆஸ்திகவாதியைவிட புராணங்களையும் இதிகாசங்களை அதிகமாக கற்பவன் நாத்திகவாதியே. எப்படியோ அவனையுமறியாமல் நல்ல கருத்துக்கள் அவன் மனதில் நுழைந்து விடுகிறது. எல்லாம் நன்கு கற்றறிந்த பின்பு அதற்கு எதிர்வாதமாக விதண்டாவாதமாகவே நாத்திகம் பேசிவருகின்றான். அது அவனுடைய ஊழ்வினைப் பயன் என விட்டு விட வேண்டியதுதான்.

இரு கரங்களால் சூரியனை மறைத்து விடவும் முடியாது. சமுத்திரத்தை சிறிய சிமிழினில் அடக்கிவிடவும் முடியாது. அது அவர்களின் அறியாமையையே எடுத்துக் காட்டும்.

அண்மையில் இருக்கும் திருக்கழுக்குன்றத்தில் இரண்டு கழுகுகள் தினமும் பகல் 12 மணியளவில் வந்து பூசாரி கொடுக்கும் சர்க்கரைப் பொங்கலை சாப்பிட்டுவிட்டுத் தானே செல்கிறது. இது பற்றி 1500 வருடங்களுக்கு முன்பே தோன்றிய ஊர்பேரை வைத்தே நிரூபணமாகிறதல்லவா.

சபரிமலையில் ஐயப்பனுக்கு அலங்கரிக்கப்படும் நகை பெட்டியை பந்தள அரணமனையிலிருந்து தமது தோளில் பக்தர்கள் சுமந்து வருகின்ற வேளையில் நகைப்பெட்டி கோயில் வந்தடையும் வரை வானில் பெட்டியின் கூடவே கருடன் ஒன்று வட்டமிட்டுக் கொண்டு வருவதை பல்லாண்டுகளாக கோடானு கோடி பக்தர்கள் கண்டுகளிப்பதை இப்பொழுதும் காணலாம்.

மேலும் காந்தமலையில் குறிப்பிட்ட நாளில் மகர ஜோதியை கோடானு கோடி பக்தர்கள் பரவசத்துடன் வணங்கிவரவதும் பற்பல ஆண்டுகளாகவே நடந்து வரும் ஓர் அதிசயக்கத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக பற்பல நிகழ்வுகளாக பற்பல இடங்களில் பற்பல உருவங்களில் இறைவன் வெளிப்பட்டு தன்னை தனது சக்தியை வெளிப்படுத்திக் கொண்டுதானிருக்கிறான். அதனை நம்பியவர்களுக்கு கடவுளாய் அருள் புரிகிறான். நம்பாதவர்கள் பாதை தெரியாமல், பேர் தொரியாமல் ஊருக்குப் பயணம் செய்கிறார்கள்.

இதனால் பெருநஷ்டமும், இழப்பும் ஆண்டவனுக்கல்ல, நம்பாத மானிடருக்கே.

இரண்டு கண்களும் கெட்ட பிறகும் சூரிய நமஸ்காரம் செய்பவர்களும் இருப்பதையும் நாம் கண்கூடாக கண்டு வருகின்றோம்.

**லிங்கங்கள்**

லிங்கம் என்பது உருவமற்ற அருபமாகும். இறைவன் உருவமற்றவன் என்பதை உணர்த்துவதே லிங்கத்தின் தத்துவமாகும்.

லிங்கங்களில் முதன்மையான சிறப்பு பெற்றது சுயம்பு லிங்கமாகும். அவை தானாக முளைத்தெழுந்து அருள் பாலிப்பவையாகும்.

நமது நாட்டில் பன்னிரு தலங்களில் அமைந்துள்ள ஜோதிர்லிங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்பு மிக்க புண்ணிய தலங்களாகும்.. அவற்றுள்,

குஜராத்தில் உள்ள சோமநாதபுரம்.

| | | |
|---|---|---|
| **திரயம்பரேஸ்வரர்** | - | நாசிக் அருகே உள்ளது |
| **ஓம்காரேஸ்வரர்** | - | மத்திய பிரதேசம் |
| **இராமேஸ்வரம்** | - | தமிழ்நாடு |
| **வைத்தியநாத்** | - | மேற்குவங்கம் |
| **கேதார்நாத்** | - | உத்திரபிரதேசம் |
| **ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுன்** | - | ஆந்திரா |
| **மகாகாளேஸ்வரர்** | - | உஜ்ஜயினி |
| **விஸ்வநாத்** | - | காசி |
| **நாகேஸ்வரர்** | - | துவாரகை |
| **ஸ்ரீமாசங்கரர்** | - | மஹாராஷ்ரம் |
| **குஷ்மேஸ்வரர்** | - | எல்லோரா அருகில் |

என பன்னிரு தலங்களில் ஈசன் பல்வேறு திருவிளையாடல்களை நிகழ்த்தியும் தேடிவரும் பக்தர்களின் பாவங்களை பொடிபட பல்வேறு லிங்க வடிவஙற்களில் தோன்றியுள்ளான்.

ஆக இறைவன் ஊருக்கொரு வடிவில் பல்வேறு பெயர்களைக் கொண்டு விளங்கினாலும் இறைவன் ஒருவனே. மானிடன் உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்காகவே இப்படி பல அவதார லிங்கங்களுடன் பேர் பெற்று விளங்குகிறார்.

### இந்துக்கள் பண்டிகைகள்

பண்டிகைகள் என்பது அதன் மூலம் சகோதர பாசத்துடன் அன்பு பரிமாற்றமும் செய்து கொள்வதற்கும் மக்களிடையே சமத்துவம் உருவாவதற்காகவும். மேலும் இறைவன் மக்கள் சுபீட்சம் பெற அவதரித்த நாட்களும், அதர்மங்களை அழித்த நாட்களையுமே இந்துக்கள் போற்றி பண்டிகை தினங்களாக பெரும்பாலும் கொண்டாடி வருகின்றனர். அவற்றுள் முதன் முதலாக-

### தமிழ் வருடப்பிறப்பு

இது வருடத்தின் முதல் தமிழ் மாதமன சித்திரை மாதத்தின் முதல் நாள் கொண்டாடப்படுவதாகும். இத்தினத்தன்று ஆரம்பிக்கப்படும் ஒரு நல்ல காரியம் அவ்வாண்டெல்லாம் நல்லபடியாகவே நடக்கும் என்ற ஒரு நம்பிக்கையேயாகும். மேலும் தீய பழக்கங்களை விட்டொழித்து நல்ல பழக்கங்களை தொடர சபதமேற்கும் நாளாகவும் இதைக் கொண்டாடுவார்கள்.

### விநாயகர் சதுர்த்தி

இப்பண்டிகை ஆண்டுதோறும் ஆவணி மாதம் அமாவாசை கழிந்த 4ம் நாள் சதுர்த்தியன்று வரும் இப்பண்டிகையை வடநாட்டவர்கள் கணேசபூஜை என கூறுவர். இத்தினத்தன்று களிமண்ணால் செய்த புது பிள்ளையாரை வாங்கி வந்து காகித குடை வைத்து விநாயகருக்கு விருப்பமான பலகாரங்கள் படைத்து மரப்பீடத்தில் வைத்து வழிபடுவார்கள்.

### வரலட்சுமி விரதம்

இதுவும் ஆவணி மாதத்திலே வரும் விரதமாகும். இவ்விரதத்தை கடைபிடித்தால் சகல சௌபாக்கியமும் பெற்று நீண்ட ஆயுளையும் கொள்வதற்காக கொண்டாடப்படுவதாகும். குறிப்பாக பெண்கள் தமது கணவன் நீண்ட ஆயுள், ஆரோக்கியம், செல்வம் பெறவேண்டி தனலெட்சுமி, தான்யலக்ஷ்மி, வரலக்ஷ்மி சந்தனலக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, கஜலெக்ஷ்மி, ஜெயலெக்ஷ்மி, வித்யா லெக்ஷ்மி என அஷ்டலெட்சுமிகளையும் வணங்கி வழிபடுவதுதான் வரலட்சுமி விரதம் என்பதாகும்.

### ஆடிப்பெருக்கு

ஆற்றின் கரையோரங்களே நாகரீகங்கள் செழிப்புற காரணங்களாய் அமைந்த தோடல்லாமல் விவசாயமும் ஆற்றினை நம்பியே செழித்தோங்கியது. எனவே தங்கள் வாழ்க்கைக்கு மூலாதாரமாக விளங்கும் நதிகளை வணங்கி வழிபடலாயினர். அதோடு நதிகளுக்கு விழா எடுக்கவும் தலைப்பட்டனர். எல்லா நதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்தோடும் சமயம் ஆடிமாதம் 18ம் பெருக்குகள் கிராமப்புறங்களில் கொண்டாடி வணங்கி வழிபடுவது தமிழர்களிடையே தொன்றுதொட்டு நடந்துவரும் வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி அவிட்டம்

பூணூல் அணியும் வழக்கமுள்ள, அந்தணர்கள், விசுவகர்மா வைசியவகுப்பினர் ஆகியோர் புதிய பூணூல் அணிவதை இத்தினத்தன்று (ஆவணிமாதம்) பண்டிகையாக கொண்டாடி வருகின்றனர். இது சில சமயம் ஆடி மாதத்திலும் வருவதுண்டு. மறைவேதத்தைப் பயிலத்துவங்கும் சிறுவர்களுக்கு ஆவணி அவிட்டத்தன்றுதான் பாடம் துவங்குவது வழக்கம்.

இந்த பண்டிகையானது கிராமங்களின் ஆற்றங்கரை அல்லது குளக்கரைகளில் நடத்துவார்கள். நகரங்களில் கோயில்கள் அல்லது மண்டபங்களில் நடத்துவார்கள்.

## கோகுலாஷ்டமி

கோலத்தில் பிறந்த கண்ணனுக்கு கொண்டாடப்படும் விழாவாகும் இது. இந்த விழாவை இந்தியாவில் உள்ள இந்துக்கள் அனைவரும் கொண்டாடுவார்கள். ஆவணி அவிட்ட பண்டிகைக்குப்பின் எட்டாவது நாள் இதை கொண்டாடுவார்கள். இதனை ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியென்றும் வடக்கே ஜென்மாஷ்டமியென்றும் கூறுவார்கள்.

வசுதேவருக்கும், தேவகிக்கும் சிறையில் நள்ளிரவில் கண்ணன் பிறந்தமையால் பிறந்த நாள் விழாவாக நோன்பிருந்து கொண்டாடுகிறார்கள். ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியாக அன்று இரவு முழுவதும் தூங்காமல் வழித்திருந்து பஜனை, பூஜை ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பார்கள்.

அன்றைய தினத்தில் கண்ணன் சிறுவயதில் செய்த சாகஸங்கை நினைவு படுத்தும் வகையிலும், கிருஷ்ணனைப் போல் வேடமணிந்தும் மகிழ்வார்கள்.

நவராத்திரி

இப்பண்டிகையானது புரட்டாதி மாதம் அமாவாசைக்கு பிறகு வரும். ஒன்பது நாட்களும் நவராத்திரி விழாவாகும். பெண்களுக்காக நடத்தப்படும் விழாக்களில் இதுவும் ஒன்றாகும். முதல் மூன்று நாட்கள் பார்வதி தேவியையும், மூன்று நாட்கள் லட்சுமிதேவியையும், இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதி தேவியையும், பத்தாம் நாள் விஜயதசமியாகவும் கொண்டாடுவார்கள். கர்நாடக மாநிலத்தில் தசரா பண்டிகையாகவும் கொண்டாடுவர்ர்கள்.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட கொண்டாடப்படும் பண்டிகையாகும்.

அதர்மமே புரிந்து வந்த மகிடாசுரசை கலைமகள், அலைமகள், மலைமகள் மூவரும் சேர்ந்து வதம் புரிந்ததாக கூறுகிறது. புராணகால வரலாறு இறுதியில் வெற்றிவிழா கொண்டாட்டமாக திகழ்வது விஜயதசமி நாளாகும்.

இவ்விழாவினைக் கொண்டாடுவதால் வீடும் நலம் பல பெற்று குழந்தைகளின் கல்வியறிவும் சிறப்புறுகிறது.

நவராத்திரி ஒன்பது நாட்களும் தேவி ஊசிமுனையில் நின்று தவம் புரிந்தமையால் இவ்விழா நாட்களின்போது பெண்கள் ஊசியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணி தைப்பதைத் தவிர்ப்பார்கள்.

## ஆயுதபூஜை

தொழிலாளிகள் தங்கள் வாழ்நாளெல்லாம் உழைப்பதற்கு மூலகாரணமாகத் திகழும் ஆயுதங்கள், எந்திரங்கள் ஆகியவற்றை சுத்தம் செய்து பூஜை செய்து சரஸ்வதி படத்திற்கும் பூஜை செய்து விடுமுறை கொடுத்து விடுவது வழக்கம். தொழில்கள் மேன்மையுறவும், தொழிலாளிகள் நலம் பெறவும் இப்பூஜை கொண்டாடப்படுகிறது.

## தீபாவளி

ஏழை பணக்காரன் என எல்லோராலும் கொண்டாடப்படும் ஒரே பண்டிகை தீபாவளி என்றே கூறலாம். நவராத்திரி முடிந்த அடுத்த அமாவாசைக்கு முதல் நாள் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படும். இது ஐப்பசி மாதம் கொண்டாடப்படும்.

வடநாட்டில் தீபங்களை வரிசையாக ஏற்றி கொண்டாடுவார்கள். தென்னாட்டில் திருக்கார்த்திகையன்று தீபம் ஏற்றி கொண்டாடுவார்கள்.

## இரு வேறு காரணங்கள்

ஸ்ரீ ராமர் இராவணனைக் கொன்று 14 ஆண்டுகள் கழித்து அயோத்திக்கு திரும்புகையில் அவரைக் காணும் ஆவலில் மக்கள் அயோத்தி திரும்பும் நேரம் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள். தீபாவளியை வடநாட்டில் இராமரின் வருகைக்காக கொண்டாடுகிறர்ர்கள்.

நரகாசுரன் என்ற கொடிய அரக்கன் ஸ்ரீ கிருஷ்ணனின் மனைவி பாமாவினால் கொல்லப்படுகிறான். தன் தாயாரால் தனக்கு மரணம் ஏற்படவேண்டுமென வரம் பெற்றவன் நரகாசுரன். பாமாவிற்கு தன் மகன்தான் நரகாசுரன் என தெரியாதபடி கண்ணன் மாயை செய்து விடுகிறார். தன் தவறை உணர்ந்த நரகாசுரன் வரம் பெற்று தன் மரண நாளை மக்கள் தீபாவளியாக கொண்டாட வேண்டுமெனக் கூறி உயிர் துறக்கிறான்.

இத்தினத்தை தீபாவளியாக மக்கள் கொண்டாடி வருவதாகவும் கூறுகிறார்கள் தென்னாட்டில்.

## கேதாரீஸ்வரர் விரதம்

இவ்விரதமானது சிலர் தீபாவளி தினத்தன்றும், சிலர் தீபாவளி முடிந்த மறுநாளோ கொண்டாடுகிறார்கள். குறிப்பாக பெண்கள் தீவிர விரதமிருந்து கோயிலில் சென்று பூஜையில் கலந்து கொள்வார்கள்.

ஒரு சமயம் பிருங்கி முனிவர் என்பவர் பரமேஸ்வரரை வணங்கி பார்வதிதேவியை வணங்காமல் சென்றமையால் சினங் கொண்ட தேவி, அம்முனிவரால் நடக்க முடியாதபடி சாபமிடுகிறார். பின் அம்முனிவர் ஈஸ்வரன் அருளால் ஊன்றுகோலில் உதவியால் ஆசிரமம் சென்றடைகிறார். இதைக்கண்ட தேவி ஈஸ்வரனிடம் கோபமுற்று பூலோகம் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால்மீகி முனிவரின் ஆசிரமத்தில் தங்கி கேதாரீஸ்வரரை எண்ணி புரட்டாதி மாதம் தொடங்கி ஐப்பசி மாதம் தீபாவளி அமாவாசை வரை இருபத்தொரு நாள் கேதாரீஸ்வரர் பூஜை செய்து வருகிறார்.

இப்பூஜையானது 21 நாட்கள் செய்ய வேண்டும். ஆனால், இன்றைய அவசரயுகத்தில் ஒரே நாளில் முடித்துக் கொள்கிறார்கள். இப்பூஜையை பக்தி சிரத்தையுடன் செய்தால் பரமேஸ்வரன் சகல சௌபாக்கியங்களையும் அள்ளித் தருவார்.

## கந்தசஷ்டி விரதம்

முருகப் பெருமானுடைய விரதங்களில் தலைசிறந்த விரதம் இது. ஐப்பசித்திங்கள் வளர்பிறை பிரதமையில் இந்த விரதத்தைத் தொடங்க வேண்டும். ஆச்சார அனுஷ்டானத்துடன் சஷ்டி விரதமிருப்போர் பிள்ளைப் பேறு முதலிய எல்லா நன்மைகளையும் அடைவர். ஐப்பசி மாதம் ஆறாவது திதியன்று முருகப்பெருமான் சூரனை வதம் செய்த நாள்.

திருச்செந்தூர் முருகன் கோயிலில் மிக சிறப்பாக கொண்டாடப்படும்.

ஆறுபடை வீடு கொண்ட முருகனின் அருள்பெற்று க்ஷேமங்கள் பல பெற்றிட உகந்த விரதம் கந்தஷஷ்டி விரதமாகும்.

## கார்த்திகை தீபம்

கார்த்திகை மாதம் கிருத்திகையன்று இல்லங்கள்தோறும் தீபங்கள் ஏற்றி சிவனுக்காக கொண்டாடப்படும் திருநாள். இதை நோன்பாகவும் கொண்டாடுவார்கள். பொரி உருண்டையும், இலையப்பமும் இப்பண்டிகைக்குரிய சிறப்பு பலகாரமாகும்.

மும்மூர்த்திகளுள் யார் பெரியவரென்று பிரம் - விஷ்ணுக்களுக்கு சண்டை ஏற்பட்டு, சிவபெருமான் தீப்பிழம்பாய் விண்ணும் மண்ணும் ஏகமாய் நின்றார். தனது அடியையும், முடியையும் கண்டு வருமாறு திருமாலையும், பிரம்மனையும் பணிக்க திருமால் பன்றி உருவெடுத்து, பூமியைக் குடைந்து அடியைத் தேட பிரம்மனோ அன்னப்பறவையின் மீதேறி வானில் முடியைத் தேடியலைந்தார். இருவருமே தமது முயற்சியில் தோல்வியடைந்து சிவனே முழுமுதற் கடவுளென ஒப்புக்கொண்டு சிவனை வணங்கி நின்றனர்.

சிவபெருமான் தீப்பிழம்பாய் நின்ற தலமே திருவண்ணமலையென்பர். இதனையே சிவனாக வணங்குகின்றனர். சிவன் ஜோதிவடிவானவன் என்பதை குறிக்கும் பண்டிகை இது. இந்த பஞ்ச பூத தலத்தை நினைத்தாலே முக்தி கிட்டும் எனலாம்.

இத்திருநாளன்று கோயில் முன்பாக பனையை நிறுத்தி அதனைச் சுற்றி பனை ஓலையால் வேய்ந்து கோயில் பூஜை முடித்து, மந்திரங்கள் உரைத்து நீரிறைத்து தூய்மைப்படுத்தி அதனை தீயிட்டு கொழுத்துவார்கள் இதனை 'சொக்கப்பானை' என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதம் வரும் ஏகாதசிக்கு வைகுண்ட ஏகாதசி என்று பெயர்.

அன்றிரவு முழுவதும் திருமாலை நினைத்து கண்விழித்து விரதம் மேற்கொள்வர். அன்று தான் வாழ்வில் நல்ல ஆத்மாக்களாக திகழ்ந்தவர்களுக்காக சொர்க்கவாசல் திறப்பதாக கூறுவார்கள்.

## திருவாதிரை

கண்ணபிரான் கீதையில் 'நான் மார்கழி மாதமாயிருக்கிறேன்' என்கிறார்.

மார்கழி மாதம் பௌர்ணமியையொட்டி திருவாதிரை நட்சத்திரம் வருகிறது. மார்கழி திருவாதிரை சிதம்பரத்தில் விசேஷமாக கொண்டாடப்படும்.

திரு+ஆ+திரை=திருஆதிரை, ஆன்மாவை மறைத்தல் திருவாதிரை நாளில் நடராஜ பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறும். தேவாரம் முதலிய மறைகளுக்கு திருக்காப்பிட்டு திருவெம்பாவை ஓதப்படும்.

## பொங்கல்

பொங்கல் பண்டிகையென்பதை தமிழ்நாட்டில் தமிழர் திருநாளாகக் கொண்டாடுகின்றனர்.

இப்பண்டிகையை நாலு நாட்கள் கொண்டாடுவர்ர்கள். முதல் நாள் போகிப் பண்டிகை, இரண்டாம் நாள் பொங்கல் திருநாள், மூன்றாம் நாள் மாட:டுப் பொங்கல், நன்காம் நாள் காணும்பொங்கல் என்பனவாகும்.

நாடு வளமடைந்தால்தான் மக்கள் சுகபோகமாக வாழமுடியுமென்பதால் மழையை தருவிக்கும் இந்திரனுக்கு மார்கழி மாதக் கடைசியில் போகிப் பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

பொங்கல் என்பது சூரியனை வழிபடும் பண்டிகையாகும். சூரியனுடைய அருளின்றி விவாசாயம் செழிக்க முடியாது. நோய் நொடியின்றி மக்களை நலமுடன் வாழவைப்பவன் சூரியன். தைமாதம் விளைந்த முதல் நெல்லை அறுத்து பொங்கல் வைத்து படைத்து விவசாயமும் மக்களும் செழிக்க அருள் புரியுமாறு வேண்டிக்கொள்ளும் பண்டிகையாகும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்காதேவி



இந்து சமயத்தில் சக்தி வழிபாடு சிறப்பான இடத்தைப்பெற்றுள்ளது. லோக மாதாவான பராசக்தியே பல்வேறு சக்திகளாக தோன்றி உயிர்களைச் செம்மையாக இயக்கி வருகிறாள். அம்முறைப்படி தன்னை பக்தியோடு வழிபடுவோர்க்கு வெற்றி அளிக்கும் அளிக்கும் சக்தியாக விளங்குபவள் கொற்றவையாகிய துர்காதேவி. கொற்றவை வழிபாடு பற்றி சங்க நூல்களில் பல குறிப்புகள் உள்ளன.

திருமுருகாற்றுப்படையிலும் "வெற்றிவேற் போர் கொற்றவைச் சிறுவ" என்று வருகிறது. பராசக்தியின் அம்சமே கொற்றவை. ஆதலின் முருகன் கொற்றவைச் சிறுவ என்று அழைக்கப்படுகிறான்.

விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்து அருள்செய்குவாய்

சிவபெருமானுக்கும் பராசக்திக்கும் வேறுபாடு இல்லாமையினால் சிவன் செய்த விஷமுண்ட காரியத்தை அம்பிகை செய்ததாக இளங்கோவடிகள் பாடுகிறார். கொற்றவையை வணங்குகிற வேடர்கள் அவளை துதித்துப் பாடுவதாக வரும் பாட்டு இது

தேவர்கள் அமிர்தத்தை நுகர்ந்ததும் இறந்துவிட்டார்கள் ஆனால் யாரும் உண்ண விரும்பாத நஞ்சை உண்ட சிவபெருமான் இறவாமல் இருந்து அனுக்ருஹம் புரிகிறார்.

அம்பிகைதான் மரணத்தைப் போக்குகிறவள். இந்த கருத்தை ஆதிசங்கரர் த்ரிபுரசுந்தரி வேதபாத ஸ்தோத்திரத்தில் வெளியிட்டிருக்கிறார்.

இந்து மத வழிபாட்டு ரீதியில் சக்தி தேவியான துர்க்கையைப் பூஜிக்கும் வழக்கம், எப்போது முதல் வழக்கத்திற்கு வந்தது என்பது நிச்சயமாக தொழுது வந்திருக்கிறார்கள். மகாபாரத யுத்தத்தில் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு துர்கையை தியானிக்கும்படி உபதேசம் செய்கிறார். பழைய இலக்கியங்களில் துர்கையைப் பற்றிய குறிப்புகள் வருகிறது. ஆதிசங்கரரின் அமரு சதகத்திலும், மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரத்திலும், பாண மஹாகவியின் காதம்பரியிலும் சண்டிசதகத்திலும், சோமதேவரின் கதா சரித்சாகரத்திலும், துர்கையைப்பற்றி ஏராளமாக கூறப்பட்டுள்ளது.

துர்காதேவி, தாங்கமுடியாத துன்பங்களையும் தாங்க வைப்பதால் அம்பிகைக்கு துர்க்கை என்ற பெயர் ஏற்பட்டது.

தேவர் கஷ்டங்களிலிருந்தும் சத்ரு பயங்களிலிருந்தும் காப்பாற்றுவதால் துர்கை எனப் பெயர் பெற்றாள் துர்க்கையை ஒன்பது வகையாக சிவாகமம், மந்திர சாஸ்திரம், புராணங்கள் கூறுகிறது. சிவாகமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்னி மாஹாஜலோபிரம்மா விஷ்ணு ருத்ரவநஸ்ததா /
ஸ்தூலசூலிநி பேதாக்யா நவதுர்கேதி நாம: //

1. அக்னிதுர்கா, 2. மஹாதுர்கா, 3. ஜலதுர்கா,

4. பிர்ம்மதுர்கா, 5. விஷ்ணுதுர்கா, 6. ருத்ரதுர்கா,

7. வனதுர்கா, 8. ஸ்தூலதுர்கா, 9. சூலினிதுர்கா

மந்திர சாஸ்திரமானது ஒன்பது துர்கைகளைப் பற்றி கூறுகிறது,

(சுலோகம்)

துர்கே சூலினி ஜாதவேதஸி மஹாசாந்தியா ஹ்வ்யோபரி
ஜ்வலாதுர்கீவராபீதே லவணேகே தீபாபிதே ஹ்யாஸுரி
ஏஹ்யம்பே புரதோ மமாத்ய பயக்ருத் ரோஹாரி பீடாதிமான்
வித்வஸ்தான குருதேஹி ஸௌக்ய மதுலம் பக்திம் ததாவிராஹாதாம்

1. மூலதுர்கா, 2. சூலினிதுர்கா, 3. ஜாதவேததுர்கா,

4. சாந்திதுர்கா, 5. சபரீதுர்கா, 6. ஜ்வலதுர்கா,

7. லவணதுர்கா, 8. தீபதுர்கா, 9. ஆஸுரிதுர்கா

மார்கண்டேய புராணத்தில் ஒன்பது துர்கைகளைப் பற்றி கூறுகிறது.

(சுலோகம்)

பிரதமம் சைல புத்ரீச த்விதீயம் பிரம்மசாரிணி /
த்ருதீயம் சந்திரகண்டேதி கூஷ்மாண்டேதி சதுர்த்தகம் //
பஞ்சமம் ஸ்கந்த மாதேதி ஷஷ்டம் காத்யாயிநிதி ச
ஸப்தம் காளராத்ரிச மஹாகௌரீ திசாஷ்டமம் /
நவமம் ஸித்திதாப்ரோக்தா நவதுர்கா ப்ரகீத்திதா //

1. சைலபுத்ரீதுர்கா, 2. பிரம்மசாரிணிதுர்கா, 3. சந்திரகண்டதுர்கா,

4. கூஷ்மாண்டதுர்கா, 5. ஸ்கந்தமாதாதுர்கா, 6. காத்யாயினிதுர்கா,

7. காளராத்ரிதுர்கா, 8. மஹாகௌரீதுர்கா, 9. ஸித்திதாயினீதுர்கா

## ராகு கால துர்கை வழிபாடு ஏன்?

ஸ்ரீ துர்கையை வழிபட வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மிகவும் ஏற்றது. அஷ்டமி திதி மிக சிறந்த நாள் ராகுகாலத்தில் எந்த சுபகாரியமும் செய்யக்கூடாது. ஆனால், துர்கையை வழிபட சிறந்த நேரமாகும்.

ஜோதிட சாஸ்த்திரத்தில் ராகுகிரஹம் சாயா (நிழல்) கிரஹம் எனப்படுகிறது அதற்கு உடலில் விஷம், ஞாயிற்றுக்கிழமை சூரியன் மறைவதற்கு 1.30 மணி நேரம் முன்பு இராகுகால நேரமாகும் ஸ்ரீதுர்க்கையை தனது உபாசனாதெய்வமாகக் கொண்டவன் இராகு. இராகுகால நேரத்தில் ஸ்ரீ துர்க்கையை வழிபடுகிறவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு நன்மையே செய்திடுவான்.

ஒருவருக்கு ஜாதகத்தில் பிறக்கும்போது செவ்வாய் கிரகம் இருக்கும், இடத்தைக்கொண்டு செவ்வாய்தோஷம் இருக்கிறது என்று கூறுவார்கள். ராகுவும் செவ்வாயும் சேர்ந்திருந்தாலும் தோஷம் உண்டு.

இவ்வாறு தோஷமுடையவர்கள் செவ்வாய் ஞாயிற்றுக் கிழமைகளில் இராகு காலத்தில் ஸ்ரீதுர்கா பூஜை வழிபாடு செய்தால் சுபபலன்கள் ஏற்படும்.

சிவாலயங்களில் தேவகோஷ்டத்தில் வடக்கு நோக்கி துர்க்கை ஸ்தானம் இருக்க வேண்டுமென சிவாகமம் கூறுகிறது. சில ஆலயங்களில் விசேஷ முறையில் பிரகாரத்திலும் தனி ஆலயங்களாகவும் அமைக்கப்படுகின்றது.

துர்கா லக்ஷ்மி சரஸ்வதி ஸமஷ்டி மந்த்ரம் ஸ்ரீநவாக்ஷரியாகும். துர்காதேவிக்கு தனித்தனியாக மூல மந்திரங்கள் உள்ளது. ரிக்வேதத்தில் துர்க்கா சூத்தம் உள்ளது, காயத்ரிகளும் உள்ளது.

## நவதுர்கா தலங்கள்

1. பூம்புகாரில் (மெயின் ரோடு) வடக்குமுகமாக தனிக்கோயில்
2. தருமபுர ஆதீனத்தில் 18 கை மஹாலட்சுமி துர்கை
3. மயிலாடுதுறை சேந்தங்குடி வடக்கு முகமாக துர்கை
4. கொறுக்கை (மாயூரம்சமீபம்) வனதுர்கை
5. திருவாளபுத்தூர் சிவாலயத்தில் துர்கை
6. கிடாத்தலைமேடு சிவாலயத்தில் துர்கை
7. கதிராமங்கலம் வனதுர்கை தனிக்கோயில்
8. மஹாராஜபுரம் (திருவாலங்காடு சமீபம்) விஷ்ணுதுர்கை
9. பட்டீசுவரம் நவகோடி நாயகிதுர்கை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ மஹாலக்ஷ்மி



லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்ரராஜ தனயாம் ஸ்ரீரங்க தாமேஸ்வரீம்
தாஸீபூத ஸமஸ்த தேவவநிதாம் லோகைக தீபாங்குராம்
ஸ்ரீமந்மந்த கடாக்ஷ லப்த விபவ ப்ருஹ்மேந்த்ர கங்காதராம்
த்வாம் த்ரைலோக்ய குடும்பினம் ஸரஸிஜாம் வந்தே முகுந்தப் பிரியாம்

செல்வம் வேண்டாதவர் யார்? மனிதன் மனிதனாக வாழ செல்வம் அத்யாவசியம். அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை, என்கிறது திருக்குறள். இப்பொழுது ரூபாயும் காசுமே தனமாக கருதப்படுகிறது. ஸகல செல்வங்களுக்கும் நாயகியாக கருதப்படுகிறவள் ஸ்ரீமஹாலக்ஷ்மி. அமிர்தம் வேண்டி பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது அதிலிருந்து பல செல்வங்களுடன் (ஐராவதம், காமதேனு, கௌஸ்துபமணி, உச்சைச்ரவஸ் என்ற குதிரை, அமுத கலசத்துடன் தன்வந்தரி, நவரத்தினங்கள்) தோன்றியவள் ஸ்ரீமஹாலக்ஷ்மீ, ஸ்ரீ என்ற வடமொழிச் சொல்லும் திரு என்ற தமிழ்ச் சொல்லும் ஸ்ரீமஹாலக்ஷ்மியையே குறிக்கும். மனிதனின் செல்வமாகிய தனத்துடன் பதினாறு விதமான செல்வங்களும் இணைந்து கிடைத்தால் தான் வாழ்க்கை சிறப்புப் பெறும். பதினாறும் பெற்றுப் பெறுவாழ்வு வாழ்வாயாக! என பெரியோர்கள் ஆசீர்வதிப்பார்கள். பதினாறு செல்வங்களை ருக வேதத்தில் ஸ்ரீஸூக்தமாகும். ஸ்ரீமஹாலக்ஷ்மீ வ்யஷ்டி வடிவாக உள்ளதே பதினைந்து ரிக்குகளாக, தனது பதினாறு கலைகளில் பதினைந்து கலைகளை வெளிப்படுத்தும் போது

1. **ஆதிலக்ஷ்மீ** : இவள் ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் என்ற முவ்வினைகளையும், ஆதிமூலமே! என்ற கஜேந்திரனுக்கு அருளிய ஆதிசக்தியும் இவளே.

2. **சந்தனலக்ஷ்மீ** : மனித வாழ்க்கையில் எவ்வளவு எல்லா செல்வங்கள் இருந்தாலும் மழலை செல்வம் இல்லாவிட்டால் சிறப்பு பெறாது அதனை தருபவள் இவள்.

3. **கீர்த்திலக்ஷ்மீ** : எவ்வளவு அழகு செல்வங்கள் இருந்தாலும் கீர்த்தி (புகழ்) இல்லாவிட்டால் சிறப்பு பெறாது, என்பதை தோன்றிற் புகளோடு தோன்றுக! என்பர் திருவள்ளுவர் உலகப்புகழ் கீர்த்தியை தருபவள் இவள்.

4. **வித்யாலக்ஷ்மீ** : கல்வி (வித்யை) பலவகையுடையது அறிவுக்கல்வி தொழிற்கல்வி வாழ்க்கைக் கல்வி முதலிய பல கலைகளையும் அருள்பவள் இவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **ஆதிலக்ஷ்மீ** : பொருள் செல்டவத்தைத் தந்து வாழ்க்கையில் முன்னேற செய்பவள் இவள்.

6. **தான்யலக்ஷ்மீ** : எல்லா உணவு தான்யங்களையும் தந்து வாழ யெ்பவள் இவள்.

7. **மேதாலக்ஷ்மீ** : அறிவில் சிறந்து பல ஆராய்ச்சி மூலமும் புதுகண்டுபிடிப்பு மூலமும் உலகோர் போற்றுதலை அடையச் செய்பவள் இவள்.

8. **கஜலக்ஷ்மீ** : யானை குதிரை பசு மூலம் போக போக்யங்களை தருபவள் இவள்.

9. **வீரலக்ஷ்மீ** : மனோதைர்யத்தையும் வீர பராக்ரமங்களால் புகழடைய செய்பவள்.

10. **விஜயலக்ஷ்மீ** : எடுத்த எந்த காரியத்திலும் பூரண வெற்றி பெற செய்பவள் இவள்.

11. **ஸௌபாக்யலக்ஷ்மீ** : ஸகல ஸௌபாக்யங்களையும் மாங்கல்ய பாக்யம் திருமண பாக்யம் முதலியவைகளை அருளிச் செய்பவள் இவள்.

12. **ஆலேக்யலக்ஷ்மீ** : நோயற்ற வாழ்வையும் ஆரோக்யமான த்ருடகாத்திர சரீரத்தையும் மனோதிடத்தையும் தருபவள் இவள்.

13. **ஸித்திலக்ஷ்மீ** : போகஸித்தி காரிய ஜனவசீகர ஸித்தி முதலான ஸித்திகளை தந்து ஸித்தர்களாக ஆக்குபவள் இவள்.

14. **ஸௌந்தர்யலக்ஷ்மீ** : இழகு, புற அழகுடன் ஆத்ம ரூப லக்ஷணத்தை அறிய செய்பவள் இவள்.

15. **ஸாம்ராஜ்யலக்ஷ்மீ** : இம்மை, இவ்வுலக வாழ்க்கையில் மிகுந்த செல்வாக்கு, உயர்பதவிகளை தந்தம், மறுமைக்கு மோக்ஷ ஸாம்ராஜயத்தையும் அருள்பாலிப்பவள்.

16. **மஹாலக்ஷ்மீ** : உலக ஸ்ருஷ்டிக்கு ஆதிகாரணமான சகல செல்வங்களையும் சகல போகங்களையும் தருபவள் இவள்.

பெண்கள் தங்களுக்கு மாங்கல்யம் நீடித்து தீர்க்க சுமங்கலியாக வாழ மாசி மாதம் கடைசியில் நோன்பு விரதமிருந்து ஸ்ரீதேவியை வேண்டி மங்கள மஞ்சள் கலந்த நூலை தன் கழுத்தில் அணிந்து மங்கள வாழ்க்கை பெறுவர். ஆடி மாத வளர்பிறை அஷ்டமியில் நோன்பு விரதமிருந்து ஸகல செல்வங்களும் பெற வேண்டி ஸ்ரீமஹாலக்ஷ்மியிடம் வரம் வேண்டி வரலக்ஷ்மீ பூஜை செய்து மஞ்சள் பூசிய நூலை தன் வலது கையில் அணிந்து ஸகல செல்வங்களையும் பெற வேண்டுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயங்களில் ஆலயத்தின் வடமேற்கு திசையில் மஹாலக்ஷ்மீக்கு ஆலயம் அமைப்பதைப் பற்றியும், த்ராவாத்தில் (வாசங்படி) மேலே மஹாலக்ஷ்மியை பூஜிப்பதையும், கும்பாபிஷேக யாகசாலையிலும் வாயுமூலையில் மஹாலக்ஷ்மியை பூஜிப்பதையும் சிவாகமங்கள் கூறுகின்றன. இருக்குவேதம் ஸ்ரீஸூக்தத்தினால் ஸ்ரீமஹாலக்ஷ்மியை ஸ்தோத்திரம் செய்து அவளது பெருமைகளை கூறுகிறது. ஸ்ரீமஹாலக்ஷ்மீ காயத்ரி மிகுந்த பலனை தரவல்லது ஸ்ரீமஹாலக்ஷ்மீ யந்திரம் வீட்டில் வைத்து பூஜித்தாலும் ரட்சையாக அணிந்தாலும் தரித்ரம் நீங்கி செல்வம் பெருகும்.

ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு வடமொழியிலும் தமிழிலும் பல ஸ்தோத்ரங்கள் உண்டு.

## ஸ்ரீ சுவாஸினி பூஜை

நிறைய அனுபவம் பெற்று கஷ்ட நஷ்டங்களை சமாளித்து பேரன் பேத்தி எடுத்து எல்லோரிடமும் அன்பு பொழியும் நிலை இது துரிய நிலை. மகன் தன்னைக் கேவலப்படுத்தினாலும் அவனை வாழ்த்தும் அவ்யாஜ கருணை நிலை. இது மிக உயர்ந்த நிலை. இந்நிலை வந்தவர்களே தெய்வத்திற்கு சமமாகி தத்வமஸி என்ற மகா வாக்கியத்தின் உள்ளார்த்தமாக ஆகிவிடுகிறார்கள்.

ஸ்ரீ சுவாஸினி பூஜையில் தரும் ஸௌபாக்கிய த்ரவியங்கள் விவரம்

ஹரித்ரா குங்குமம் சைவ ஸிந்தூராதி ஸமன்விதம்
கஜ்ஜலம் கண்டஸூத்ராணி ஸௌபாக்கிய த்ரவிய முச்யதே

(மஞ்சள் குங்குமம், ரவிக்கைத்துணி, கண் மை, தாலிக்கயிறு இவ்வைந்தும் சுவாஸினிகளுக்கு தருவது சிறப்பு.

அர்ப்பண மந்த்ரம் (ஸௌபாக்ய த்ரவியத்தை தரும்போது சொல்லும் மந்த்ரம்)

ஹரித்ராம் குங்குமம் சைவ ஸிந்தூரம் கஜ்ஜலாந்விதம் /
ஸௌபாக்ய த்ரவிய சம்யுக்தம் க்ருஹாண பரமேஸ்வரி //

(ஆதாரம்: பரசுராம கல்ப ஸூத்ரம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ சரஸ்வதி



அருவமாயுள்ள பரபிரம்ம கருணையினால் எடுத்துக் கொண்டவடிவமே ஆதிசக்தியாகும் ஸ்ரீ ஆதிசக்தியானவள், தமோ ரஜ ஸத்வ குணங்களை ஸ்ருஷ்டித்தாள். தாமோகுணப்ரதானமாகமஹாகாளியையும் ரஜோகுணப்ரதானமாக மஹாசரஸ்வதியையும் சத்வகுணப்ரதானமாக மஹாலக்ஷ்மியையும் சிருஷ்டித்தாள். மூவரையும் முத்தொழிலில் ஈடுபட செய்ய அவர்கள் மூலமாக உலகைபடைத்தும் காத்தும் அழித்தும் முத்தொழில் செய்திட வேண்டி ஸ்ருஷ்டித்தாள். ஸ்ரீமஹாலக்ஷ்மி பிரம்மனையும் லக்ஷ்மியையும் ஸ்ருஷ்டித்தாள் ஸ்ரீமஹா சரஸ்வதி ருத்ரனையும் சரஸ்வதியையும் ஸ்ருஷ்டித்தாள். குண சேர்க்கையின் பொருட்டு தமோகுண விஷ்ணுவும் ஸத்வ குணலக்ஷ்மியும் சேர்ந்து (ஸ்திதி) காத்தல் தொழிலையும், ரஜோகுண ருத்ரனும், தமோகுண பார்வதியும் சேர்ந்து (ஸம்ஹார) அழித்தல் தொழிலையும், ஸத்வகுண ப்ரனையும், ரஜோகுண சரஸ்வதியும் சேர்த்து (ஸ்ருஷ்டி) படைத்தல் தொழிலையும் செய்திட ஆக்ஞாபித்தாள்

மஹா சரஸ்வதியின் த்யானம் மார்க்கண்டேய புராணத்தில் உள்ள சப்தசதியில்

கண்டாசூல ஹலானிசங்க முஸலேசக்ரம் தனுஸ்ஸாயகம் /
ஹஸ்தாப்ஜைர் தததீம் கனாந்தவிலஸச் சீதாம்சுதுல்யப்ரபாம் //
கௌரீதேஹ ஸமுத்பவாம் த்ரிகதாம் ஆதாரபூதாம் மஹா /
பூர்வாமத்ர ஸரஸ்வதி மனுபஜே சும்பாதி தைத்யார்த்தினீம் //

மஹாசரஸ்வதிக்கு எட்டுகைகளும் மணி சூலம் கலப்பை சங்கம் உலக்கை சக்ரம் வில் அம்பு ஆகியவற்றை தனது தாமரைக்கைகளில் தரிப்பவளும் மேகத்திடை விளங்கும் குளிர்ந்த சந்திரனைப் போன்ற பிரபையுடன் பிரகாசிப்பவளும், கௌரியின் தேகத்தில் உதித்தவளும், மூவுலகிற்கும் ஆதாரமாகியவளும், அபூர்வ வடிவினளும் சும்பன் முதலிய அசுரர்களை நாசஞ் செய்தவளுமாகிய ஸ்ரீமஹாஸரஸ்வதியைத் தியானிக்கிறேன்.

நான்கு கைகளையுடைய சரஸ்வதி தான் ப்ருஹ்ம பத்தினியாகும். வெண் தாமரையில் அமர்ந்து வெண்மையான வஸ்திரமணிந்து புத்தகம் ஜபமாலை வீணை கமண்டலம் முதலியவைகளை தரித்து ஸர்வாலங்காரபூஷிதையாக கல்விக்கு அதிதேவதையாக ஸகல கலா ஞானங்களையும் வாரிவழங்குபவள் என்கிறது சிவாகமம்.

சரஸ்வதியின் அவதார அம்சங்கள் பல உள்ளதை வேதங்களும் உபநிஷதங்களும் ஆகமங்களும் மந்திர சாஸ்திரங்களும் புராணங்களும் மிக விரிவாக தெளிவுபடுத்துகின்றன.

ருத்ரவாகீஸ்வரி விஷ்ணுவாகீஸ்வரி நகுலி பராசரஸ்வதி பாலாசரஸ்வதி தாரணசரஸ்வதி நீலசரஸ்வதி நித்யாசரஸ்வதி நர்த்தனசரஸ்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்வாதினி முதலியோர்கள்.

ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமத்தை இயற்றிய வாக்தேவதைகள் வசினி காமேஸ்வரி மோதினி விமலா அருணா ஜயனி ஸர்வேஸ்வரி கௌலினி.

இராமாயணத்தில் மந்திரையாக சரஸ்வதி. அம்பிகாபதி பாடலுக்கு பொருள் கூற கொட்டி கிழங்கு விற்பவளாக வந்தவளும் சரஸ்வதியே. ஔவையை சரஸ்வதியின் அம்சமாகவே கருதப்படுகிறது.

ஆதிசங்கரரிடம் வாதித்து திருப்தியடைந்தததால் தன்பெயரையே விருதாக கொடுத்ததால் இன்றும் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் தங்கள் பெயருடன் 'சரஸ்வதி' என்று இணைத்திருப்பதை அறிகிறோம்.

கர்நாடக மாநிலத்தில் துங்கபத்ராநதிக்கரையில் ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட சிருங்கேரி சாரதாபீடாதிகள் தங்கள் பெயருடன் 'பாரதி' என்ற பெயரை இணைத்து கொண்டுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

## நித்யா சரஸ்வதி

வேதம் ஆதிகாலம் முதல் ஓதப்பட்டுவரகிறது. வேதத்தை நித்யாசரஸ்வதி என்று அழைக்கப்படுகிறது.

## வாக்வாதினி

சக்தியின் எண்ணற்ற வடிவங்களிலே வாக்வாதினி வடிவம் ஒன்று அவள் பரா பச்யந்தி மத்யமாவைகரி என்ற நான்கு அம்சமாக ஒலிவடிவமாக உள்ளாள். இவள் சகல வித்யைகளுக்கும் கலைகளுக்கும் அதிபதியாக உள்ளாள்.

வாக்தேவதைகள்

மாத்ருகா அக்ஷரங்கள் என்பது வடமொழியில் ஐம்பத்தொறு அக்ஷரங்களைக் குறிக்கும்.

1. அ முதல் அ : வரை பதினாறு அக்ஷரங்கள் இதற்கு அதிபதி வசினி வாக்தேவதையாகும்
2. க முதல் ஐந்து அக்ஷரங்களுக்கு அதிபதி காமேஸ்வரியாகும்
3. ச முதல் ஐந்து அக்ஷரங்களுக்கு அதிபதி மோதினியாகும்
4. ட முதல் ஐந்து அக்ஷரங்களுக்கு அதிபதி விமலாவாகும்
5. த முதல் ஐந்து அக்ஷரங்களுக்கு அதிபதி அருணாவாகும்
6. ப முதல் ஐந்து அக்ஷரங்களுக்கு அதிபதி ஜயினியாகும்
7. ய முதல் நான்கு அக்ஷரங்களுக்கு அதிபதி ஸர்வேஸ்வரியாகும்
8. ச முதல் ஆறு அக்ஷரங்களுக்கு அதிபதி கௌளினியாகும்

இவர்கள் எட்டுபேரும் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் இயற்றியவாகள் இவர்கள் ஸ்ரீசக்கரத்தின் ஏழாவது ஆவரணமான அஷ்டகோணங்களில் வசிப்பவர்கள் ஒவ்வொருவரும் மிகுந்த வல்லமை உள்ளவர்கள். கவிபாடுதல், பேச்சில், சங்கீதத்தில் மிக வல்லமையுள்ளவர்கள்.

## நர்த்தனசரஸ்வதி

பேலூர் (கர்நாடக மாநிலம்) நடனசரஸ்வதியின் நடனம் ஓர் ஈடு இணையற்ற கலைப்படைப்பு வேதமே சிலம்பொலியாகவும் வீணை நாதம் கீதம் இசைக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையை பருகும் துடிப்புடன் நடனமாடும் கலைவாணியின் கோலம் அற்புதமானது.

## மயூரவாஹந சரஸ்வதி

ராஜபுதன நாட்டுசிற்பங்களில் தோகைவிரித்தாடும் மயில் மீது அமர்ந்துள்ள சரஸ்வதியின் அற்புத கோலத்தைக் காணலாம்.

## சிருங்கேரி சாரதா (சரஸ்வதி)

கர்நாடக மாநிலத்தில் துங்கபத்ராநதிக்கரையில் ஸ்ரீ ஆதிசங்கரர் ஸ்ரீ சரஸ்வதி தேவியை வைத்து சாரதாபீடம் என்று இமைத்து, ஸ்ரீ சாரதா தேவியை ஸர்வாலங்கார பூஷிதையாகவும் நான்கு கரங்களில் எல்லோரையும் காக்க அபயஹஸ்தமும், இனிமையானவாக்கை அருள கிளியையும், மனநிறைவைதர பூரணகலசமும், ஸகல வித்யா ஞானங்களை அருள ஓலைச்சுவடிகளையும் தரித்து அருள்பாலித்து வருகிறாள்.

## மூகாம்பிகை (சரஸ்வதி)

மூகாசுரனை அழித்து, மூக ஓமைத்தன்மையை போக்கி, நன்றாக பேசும் ஆற்றலையும் பாடும் ஆற்றலையும் அருள் பாலிப்பதால் ஸ்ரீ மூகாம்பிகை என்ற பெயரோடு விளங்கி வருகிறாள் மூகாம்பிகை மூலமந்திரம் சரஸ்வதி ப்ரதமாக உள்ளது.

## தமிழ் நாட்டில் சரஸ்வதி

தமிழ்நாட்டில் நன்னிலம் வட்டம் பூந்தோட்டத்திற்கு மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் கூத்தனூர் கிராமத்தில் ஸ்ரீ சரஸ்வதிக்கு தனி ஆலயம் அமைந்துள்ளது. சரஸ்வதியே மூலமூர்த்தியாக கொண்ட ஒரே ஆலயம் இதுவே.

முற்காலத்தில் இத்லம் அம்பாள்புரி என்று அழைக்கப்பெற்ற வந்துள்ளது சோழநாட்டு அரசவையில் அரசவைப்புலவராக விளங்கிவந்த ஒட்ட கூத்தருக்கு, இரண்டாம் இராஜராஜசோழன் ஆட்சியில் இந்த ஊரை பரிசாக வழங்கிய காரணத்தாலும், இந்த ஊரிலேயே தங்கி சரஸ்வதியை நோக்கி தவம் புரிந்து, சரஸ்வதிஅருளாசி புரிந்ததுடன், தன்வாயில் உள்ள தாம்பூலத்தையும் கூத்தருக்கு அருளியதால் முன்னைவிட பேரறிவும் ஞானமும் பெற்று வரகவியாக திகழ்ந்தார் ஒட்டகூத்தர். அவரின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீஞானசரஸ்வதி அங்கேயே திருக்கோயில் கொண்டு வழிபடுவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதாய் வாக்குதந்து விட்டு மறைந்தாள் கூத்தர் வழிபட்டதால் இவ்வூர் கூத்தனூர் என்று ஆயிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கிராமதேவதை (1)

## ஸ்ரீ மாரியம்மன் (சீதளாதேவி)



சீதளேத்வம் ஜகன்மாதா சீதளேத்வம் ஜகத்பிதா
சீதளேத்வம் ஜகத்தாத்ரி சீளாயை நமோ நம் : - ஆதிசங்கரர்

உலகில் ஸகல ஜீவராசிகளுக்கும் ஒரு தாய் உண்டு. தாயில்லாது எந்த ஜீவராசிகளும் தோன்ற முடியாது. தாய் (1) பெற்றமாதா (2) கோமாதா (3) பூ மாதா (4) ஜகன்மாதா என நான்கு வகைப்படும். பெற்றமாதா தொடர்பு உயிர் உள்ளவரைதான். கோமாதா பால் கொடுத்து காக்கின்றவரை மட்டும்தான் பூமாதா இந்த சரீரம் இந்த உலகத்தில் உள்ளவரைதான். ஆனால் ஜகன்மாதாவோ உயிர்த்துணையாம் தோன்றாத் துணையாக ஒவ்வொரு பிறவியிலேயேயும் தோன்றாத் துணையாக இருந்து வருவதை "அபிராமி என்றன் விழித்துணையே" என்று ஸ்ரீஅபிராமி பட்டரும், தோன்றாத்துணைக்கோர் துணையாகி என்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளும் கூறுவார்கள்.

இந்த ஜகமானது (உலகம்) ஐந்து வடிவமாகவுள்ளது. 1. மண் (ப்ருத்வி), 2. அப்பு (ஜலம்) 3. தேயு (தீ) 4. வாயு (காற்று), 5. ஆகாயம் (சப்தம்) இந்த ஐந்தையும் சக்தி வடிவமாக காண்கின்றோம். மண்ணை பூமாதேவியாகவும் ஜலத்தை காங்காதேவியாகவும், காற்றை பிராண சக்தியாக காத்தாயி என்றும் சப்தரூபமான ஆகாயத்தை நாதரூபிணி ஆகாசவாணியாகவும் அழைக்கப்படுவதால் உலகத்தை ஜகன்மாதா என்று கூறப்படுகிறது அகிலாண்ட கோடி பிர்மாண்டங்களையும் ஈன்றெடுத்த அன்னையாம் ஜகன்மாதா ஸகல ஜீவராசிகளையும் அதனதன் தன்மைக்கேற்ப வினைக்கொப்ப சுகதுக்கங்களையும் மாறி மாறி அனுபவிக்க செய்வதால் அவளை மாரி அம்மா என்றழைக்கிறது.

கந்த புராணத்தில் மாரி அம்மனின் வரலாறு அறிய கிடைக்கிறது. தேவர்களுக்கு சூரபத்மனால் ஏற்பட்ட துன்பங்களைப் போக்க ஸ்ரீமுருகப்பெருமான் சிக்கலில் வேல்பெற்று, திருச்செந்தூரில் படை வீடு அமைத்து போரிடும்போது சூரபத்மனின் அமைச்சர்களில் மந்திர சாஸ்த்திரங்களில் தேர்ச்சி பெற்ற ஒருவன் அபிசார ஹோமம் (தீய வேள்வி) செய்து மிக உஷ்ணமான ரோகத்தை தேவ படைகள் மீது ஏவி விட, தேவப்படைகள் உஷ்ணரோகத்தால் சரீரமெல்லாம் கொப்புளங்கள் ஏற்பட, மிக சோர்வடைந்துள்ளதை அறிந்து, தேவசேனாபதியான ஸ்ரீமுருகப்பெருமான் வடக்கு நோக்கி சற்று தியானத்தில் அமர, உமாமஹேசனான இறைவன் தோன்றி தனது அஷ்டமூர்த்தமான (எட்டு சரீரங்கள்) 1. பிருத்வி (மண்) 2. அப்பு ஜலம்) 3. தேயு (அக்னி) 4. வாயு (காற்று) 5. ஆகாய (சப்தம்) 6. சூரியன் (பகலவன்) 7. சந்திரன் (நிலா) 8. ஆத்மா (உயிர்) இந்த எட்டு சரீரங்களில் 2-வது ஜல சரீரத்திலிருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்து வரும் உஷ்ணரோகங்களை ஆகர்ஷித்துக்கொண்டு தேவஸேனைகளை பாதுகாத்து வெற்றிப்பெற அருளினார். ஸ்ரீசீதளாசக்தியின் துணையுடன் ஸ்ரீமுருகப்பெருமான் வெற்றி பெற்றுள்ளார் என்பதை கந்தபுராணம் கூறுகிறது.

பிறகு இறைவன் இந்த சீதளா சக்தியை மக்களின் நன்மைக்காக கிராமதேவதையாக இருந்து தீயவர்களை அடக்கி நல்லவர்களை காத்திட போர் முனையில் ஆகர்ஷித்துள்ள உஷ்ணரோகத்தை வைசூரியாக உபயோகிக்கவும் மக்களின் மிகத்தேவையான ஜலத்தை வான்முகில் வழாது பெய்திட செய்து, மழைவளம் சுரக்க செய்திட மழைக்கு அதிதேவதையாக சீதளாதேவி மஹாமாரி என்ற பெயரோடு விளங்க செய்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கையர் பகுதி



- குருஜி -

## மங்கல மங்கையர்க்கு சில அறிவுரை

1. தினமும் ஸ்நானம் செய்யும் முன் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து கீழ்காணும் மந்திரத்தைச் சொல்லி ஸ்நானம் செய்யுங்கள்.

**'கங்சே ஜமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி**
**நர்மதா சிந்து காவேரி ஜலேஸ்மின் - சன்னிதிம் குரு:'**

கெங்கா முதல் காவேரிவரையுள்ள புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்வதாக மனதில் நினைத்தால் அந்த புனித நதிகளில் ஸ்நானம் செய்த பலன் உண்டாகும்.

2. வீட்டில் ஏதாவது பொருள் தீர்ந்துவிட்டால் - "இல்லை" என்று சொல்லக் கூடாது. இது வேண்டும். இது வேண்டும் என கூறுங்கள். (உ+ம் - அரிசி வாங்கவேண்டும், பருப்பு வாங்க வேண்டும்)

3. இரவு வேளையில் வீட்டை பெருக்கக்கூடாது. இரவில் வீட்டை பெருக்கி கூட்ட வேண்டிய அவசியம் வந்தால், பெருக்கிய குப்பைகளை ஒரு புறமாக வைத்துவிட்டு மறுநாள் காலையில் வெளியில் போடுங்கள். இரவில் கூட்டிய குப்பைகளை வெளியில் போடக்கூடாது.

4. தினமும் காலை, மாலை வேளைகளில் வீட்டு வாசலில் மஞ்சள்நீர் தெளித்து மங்கல கோலமிடுங்கள். அல்லது சுவாமி அறையில் மங்கள கோலமிடுங்கள். வீட்டில் இடவசதியுள்ளவர்கள் முற்றத்தில் துளசிச்செடியை நாட்டி மஞ்சள் நீர் வார்த்து துளசிக்குமுன் கோலமிட்டு வாருங்கள். எல்லாவித துன்பங்களும் விலகுவதோடு லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகும்.

5. தினமும் சுவாமி அறையில் விளக்கேற்றுமுன் தீபத்தை சுத்தம்செய்து சந்தண, குங்கும திலகமிட்டு அக்ஷதை (அக்ஷதை - மஞ்சள் கலந்த அரிசி) இட்டு மலர்களினால் அலங்கரித்து, பட்டுத் துணி சாத்தி, கீழ்க்காணும் சுலோகத்தை சொல்லி தீபத்தை ஏற்றுங்கள்.

**சர்வ மங்கல மாங்கல்யே சிவே சர்வார்த்த ஸாதகே**
**சரண்யே த்ரியம்பஹே தேவீ நாராயணி நமோஸ்துதே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுபம்பவது கல்யாணம் ஆரோக்ய தனசம்பத**
**சர்வ சத்ரு விநாசாய தீபஜ்ஜோதி நமோஸ்த்துதே**

**ஆயுர்தேஹி தனந்தேஹி வித்யாம் தேஹி நமோஸ்துதே**
**ஸமஸ்த்த மஹிலாம் தேவி தேஹிமே பரமேஸ்வரி**

எல்லாவித மங்களத்தையும், நித்ய சுமங்கலியாக வாழ மாங்கல்ய பலத்தையும், ஆரோக்கியமான வாழ்வையும், செல்வம் முதலான அஷ்ட ஐஸ்வர்யத்தையும், நுண்ணிய அறிவையும், எல்லாவிதமான சத்ரு (விரோதம்) க்களை போக்கக்கூடியதும், அனைத்து பாவங்களை நீக்கி க்ஷேமமான வாழ்வைத் தரக்கூடிய ஜ்யோதிவடிவான தீப லக்ஷ்மியைப் பிரார்த்தித்து அருள்பெறுவோம். வெற்றிலை, பழம், கற்கண்டு, பால் இவற்றில் ஒன்றை வைத்து நெய்வேத்தியம் செய்து சாம்பிராணி, கற்பூர ஆராதனை செய்து வழிபடுங்கள் லக்ஷ்மிகடாக்ஷம் உண்டாகும்.

6. தீபங்களை ஏற்றும்போது ஏகமுகதீபம், அல்லது பஞ்சமுகதீபம் சிறப்பானது. (ஏகம்-ஒன்று, பஞ்ச-ஐந்து)

7. எள் எண்ணெய் - (நல்லெண்ணை) இலுப்பை எண்ணெய் கலந்து விளக்கு ஏற்றினால் "ரோக நிவாரணம்" நோய் அகலும்.

8. பசுநெய் கொண்டு விளக்கேற்றினால் "தனவிருத்தி" செல்வம் செழிக்கும்.

9. பசுநெய், இலுப்பை எண்ணெய், வேப்ப எண்ணெய், எள் எண்ணெய், ஆமணக்க எண்ணெய் ஆகிய ஐந்தையும் சமஅளவு கலந்து விளக்கேற்றினால், "சத்ரு ஜெயம்" எதிரிகளை வெல்லலாம்.

10. பசும் நெய், இலுப்பை எண்ணெய் சமஅளவு கலந்து விளக்கேற்றினால், "ஆயுள் விருத்தி" நீண்டகாலம் சுகமாக வாழலாம்.

11. தீபத்தை கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக ஏற்றிவைப்பது சிறப்பைத் தரும். எவர்சில்வர் விளக்குகள் பூஜை, வழிபாட்டிற்கு ஏற்றதல்ல.

12. ஏற்றிய தீபத்தை அணைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் லக்ஷ்மியை மனதில் எண்ணிக் கொண்டு ஒரு பூ எடுத்து ஒற்றி அணைக்க வேண்டும். (வெறுங்கையினாலோ, வாயினால் ஊதியோ அணைக்கக்கூடாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சுவாமி அறையில் சுவாமிப்படங்கள் கிழக்குமுகமாக, அல்ல வடக்கு முகமாக வைத்து வழிபட வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் "தெற்குப்பக்கமாக" சுவாமிப்படங்கள் வைக்கக் கூடாது.

14. சுவாமி அறையில் தெய்வங்களின் படங்களுடன், அமரத்துவம் அடைந்தவர்களின் படங்களை சேர்த்து வைத்து வழிபடுவது கூடாது. (அமரத்துவம் - இறந்த பெற்றோர்களின் படங்களை தனியாகவே வைத்து விளக்கேற்ற வேண்டும்)

15. சுவாமி அறையில் கிழக்கு, அல்லது வடக்கு முகமாக வைக்கும் படங்களில் முதலில் விநாயகர், நடுவே லக்ஷ்மி, அடுத்து வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் ஆகிய மூன்று படங்களும் அவசியம்.


விநாயகர்


மஹாலக்ஷ்மி


சுப்பிரமணியர்


விநாயகர்


லக்ஷ்மி


நாராயணன்
(வெங்கடாசலபதி)


சுப்பிரமணியர்


சரஸ்வதி

வீடுகளில் உட்கார்ந்த பாவனையிலுள்ள சுவாமிப்படங்களே வைத்து வழிபடுவது உத்தமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஜோதி ஞானாமிர்தம்

## வினா – விடை

- குருஜீ -

**வினா:** புராணம் பாடிய புலவர்கள் யாவர்?

**விடை:**

1. கந்தபுராணம் - கச்சியப்ப சிவாச்சாரியார்
2. திருவிளையாடற் புராணம் - பரஞ்சோதி முனிவர்
3. திருவிளையாடற் புராணம் - பெரும்பற்றப்புலியூர் நம்பி
4. அரிச்சந்திரபுராணம் - வீரகவிராயர்
5. காஞ்சிப்புராணம் - சிவஞானமுனிவர்
   (மேலும் 25 நூல்கள் எழுதியவர்)
6. சீர்காழித்தல புராணம் - சீர்காழி அருணாசலக் கவிராயர்
7. தணிகைப்புராணம் - கச்சியப்ப முனிவர்
8. அருணாசலப்புராணம், செவ்வந்திப்புராணம், திருவிருஞ்சைப்புராணம், திருவெண்காட்டுப்புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
9. திருக்கழுக்குன்றப்புராணம் - அந்தகக்கவி வீரராகவ முதலியார்
10. சீகாளத்திப்புராணம் - கருணைப்பிரகாசர் என்னும் சிவப்பிரகாச வேலைய சுவாமிகள்
11. குற்றாலத்தலபுராணம் - திருக்கூடராசப்பக்கவிராயர்
12. சேதுபுராணம் - நிரம்பவழகிய தேசிகர்
13. 22 புராணங்கள் பாடிவர், இவற்றுள் 16 தலபுராணங்கள் - மஹாவித்வான் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை

**வினா:** சித்தாந்த சாஸ்திரப் புலவர்கள் யாவர்?

**விடை:**

1. மெய்கண்டார்
2. அருள்நந்தி சிவாச்சாரியார்
3. திருவதிகை மனவாசகம் கடந்தார்
4. உமாபதி சிவாச்சாரியார்
5. குருஞானசம்பந்த தேசிகர்
6. நமச்சிவாய மூர்த்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா:** இலக்கண நூலாசிரியர்கள் எவை?

**விடை:**
1. அகத்தியர்
2. தொல்காப்பியர்
3. ஐயனாரிதனார்
4. அவிநயனார்
5. பனம்பாரனார்
6. அமிதசாகரர்
7. குணவீரபண்டிதர்
8. பவணந்தி முனிவர்
9. நாற்கவிராச நம்பி
10. புத்தமித்திரர்
11. குணசாகரர்

**வினா:** 'நிகண்டு' நூலாசிரியர்கள் யாவர்?

**விடை:**
1. திவாகரர்
2. பிங்கல முனிவர்
3. காங்கேயர்
4. மண்டல புருஷர்
5. நிகண்டனார்.

**வினா:** காப்பியப் புலவர்கள் யாவர்?

**விடை:**
1. இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம்)
2. மதுரை சீத்தலைச் சாத்தனார் (மணிமேகலை)
3. திருத்தக்க தேவர் (சீவக சிந்தாமணி)
4. நாதகுந்தனார் (குண்டலகேசி)
5. கொங்கு வேளர் (பெருக்கதை)

**வினா:** 'கிறிஸ்தவக் கம்பம்' எனப் புகழ் பெற்ற புலவர் யார்?

**விடை:** திரு. H. A. கிருஸ்ணபிள்ளை. 'ஜான் பன்யன்' எழுதிய "Pilgrim's Progress" என்னும் நூலை 'இரட்சண்ய யாத்ரீகம்' எனும் பெயரில் தமிழ்ப்படுத்தியவர், 'இரட்சண்ய மனோகரம் 'இரட்சண்ய சமய நிர்ணயம்' 'இரட்சண்ய குறள்' என்பவை அவர் எழுதிய ஏனைய நூல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி துணை

# மாதாந்த வெளியீடு

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக மலர்)



| சந்தா விபரம் | |
| --- | --- |
| ஆயுட் காலம் ........................................................ | 1000.00 |
| ஆண்டுச் சந்தா ................................................... | 300.00 |
| வெளிநாடுகளுக்கான ஆயுட் சந்தா ............... | U. S. $ 50 |


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் ஜே. பீ.**

(அகில இலங்கை சமாதான நீதவான்)

## சர்வதேச இந்துமத குருபீடம்

## INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM

(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)

### சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

**46, 7வது லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.**

46, 7th Lane, (Bloemendhal Road) Kotahena, Colombo-13.
Tel: 011-2393436, 0722-422239
E-mail: iyappathasan@yahoo.com


Printed by: Anush Printers Col-11. Tel: 0777-244893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org